www.akaram.eu

# AKARAM
# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 9.05 திருவள்ளுவர் ஆண்டு 2052 14.11.2021 - 13.12.2021 ISSN : 2195-6480



## மனுஷங்கடா... நாங்க மனுஷங்கடா...

FREE Magazine

## தமிழ் இனமே! சிந்தித்துப் பார்!

## ஓரணியில் கைகோர்க்கும் மேற்குலகமும், திராவிடமும்...

தாட்சா'வின்

## இனப்படுகொலை ஆவணக்கையேடு

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA



Dortmund மாநகரில் மளிகை உலகின்
BIGG BOSS
மலிவும் தரமும்
என்றும்
உங்கள் TKS
TKS
BEST FOODS
7 ஆம்
ஆண்டுக்கான
விழாக்கால
பிரமாண்ட விற்பனை
விழாக்கால சலுகை
100€ க்கு மேல்
கொள்வனவு செய்பவர்களுக்கு
149€
பெறுமதியுள்ள
V BOX
99€ கிடைக்கும்
Rheinische Str.79-44137-Dortmund
tksbestfoods
0049 231 950 468 83
www.tksbestfoods.de
tks-bestfoods@web.de

TREUE BONUS 2)

ortel MOBILE



SMART WORLD

**20 countries**
**250 minutes**

250 minutes from
Germany to 20 countries

250 minutes from
Germany to Eu

Internet Flat Highspeed up to 8GB


Surf and make calls within the EU

National Flat call rate

Now for 4weeks for "

**19,99€***

# OHNE PAUSE NACH HAUSE.




Ortel. Wir sprechen Deine Sprache.

Google play · Available on the App Store

Aufladbar mit: ortel MOBILE · O2 · e-plus

Ortel Mobile GmbH, E-Plus-Straße 1, 40472 Düsseldorf. Nutzungsvoraussetzung: Erwerb eines Starterpaket (UVP 9,95 €). Standardtarif: Innerdeutsche Gespräche: 9 Cent/Min., Gespräche ins Ausland ab 1 Cent/Minute. Gespräche jeweils zzgl. einmaliger Verbindungsgebühr von max. 15 Cent je Gespräch möglich (alle Preise unter www.ortelmobile.de). SMS 15 Cent. 49 Cent/MB. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Datengeschwindigkeiten innerhalb Deutschlands und in der EU von bis zu 21,6 MBit/s (Download) und 8,6 Mbit/s (Upload). Bei den angegebenen Geschwindigkeiten handelt es sich um die jeweils technisch mögliche Maximalgeschwindigkeit. Die tatsächlich erreichte Durchschnittsgeschwindigkeit kann davon abweichen. Taktung 100 KB Schritte. 1) World Flat (24,99€ pro 28 Tage Optionslaufzeit zubuchbar zum Standardtarif): Unbegrenzte Minuten aus Deutschland in die EU, sowie Gespräche aus Deutschland in alle Netze von Bangladesch, Brasilien, Chile, China, Hongkong, Indien, Indonesien, Japan, Kanada, Malaysia, Puerto Rico, Singapur, Südkorea, Thailand, USA sowie in die Festnetze von Kasachstan, Russland, Slowenien. Dazu eine Flatrate für Gespräche in alle deutschen Netze. Dies gilt auch für Telefonate innerhalb der EU und aus der EU nach Deutschland. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Außerhalb der Inklusivleistung gelten die üblichen Konditionen Ihres Tarifs. Die Verlängerung erfolgt bei ausreichendem Guthaben automatisch, wenn die Option nicht zum Ende der jeweiligen Laufzeit gekündigt wird. 2) Verlängerung 19,99 €/28 Tage.




AKARAM

# அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 ஐப்பசி 2021 - 13 கார்த்திகை 2021

சுவடி / ISSUE 9.05



**தலைமை ஆசிரியர்**

திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**

திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**

திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**

திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**

திரு. அர்ஜுன் (ஜெர்மனி)



**தொடர்புகளுக்கு**

European Tamils Union e.V.
PO. BOX 4153, 59037 Hamm
Germany

Tel: 00 49 176 47 11 87 11
Email: editor@akaram.eu



ISSN 2195-6480

www.akaram.eu



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும் பணிவான வணக்கம்.**

# மாவீரர் நினைவுகளுடன் தொடர உறுதி எடுப்போம்



உலகநாடுகள் எங்ஙனும் கொரோனா பெருந்தொற்று நோய் மக்களைப் பலி கொண்டு வருகிறது. கடைசியாக வெளிவரும் செய்திகள் சீனாவில் சிறுவர்களைத் தாக்குவதாகவும், அவர்களுக்கானத் தடுப்பூசி மருந்துகளும் கொடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கின்றன.

எனவே, இப் பெருந்தொற்று உயிர்க் கொல்லி நெடு நாட்களுக்கு உலகத்தை அச்சுறுத்தும் நிலையை நாம் எல்லோரும் எதிர் கொள்ள வேண்டிய கட்டாயம் நிலவுகிறது. இந்த ஆண்டும் மாவீரர் நாளை நாம் முழுமையாகக் கொண்டாட முடியாத நிலையைத்தான் சந்திக்கிறோம்.

யாரால் எல்லாம் எப்படிக் கொண்டாட முடிகிறதோ, அவ்விதமாக நாம் எமது மாவீரக் கண்மணிகளைக் கண்ணீர் அஞ்சலி செய்து, மனச் சாந்தி காண்போமாக!.



தாயக மக்கள் மிகப் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் தவிப்பதால், புலத்தில் வாழும் நாம்தான் அவர்களின் சார்பாக மாவீரர் நினைவைச் சுமக்க வேண்டியவர்களாக உள்ளோம். பல நாடுகள் புலிகள் அமைப்பின் மீதான தடையை மிகக் கடுமையாக்கி, எமது விடுதலைத் தாகத்தை முற்றாக அழித்து விட முயன்று வருகின்றன. எனவே, நாம்தான் என்ன இடர்ப்பாடுகள் வந்தாலும், மன உறுதியுடன் எமது அஞ்சலியைத் தவறாமல் செலுத்த வேண்டும்.

நீதியரசர் திரு விக்கினேஸ்வரன் தனித் தமிழ், ஈழம் நோக்கிய அரசியல் நகர்வில் மிக உறுதியாகச் செயற்பட்டு வருகிறார். ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்? தொடரில் விபரங்களை அறியலாம்.

2009 தோல்வி நாம் மீண்டும் எழுந்து, எமது அரசியல் போராட்டத்தைத் தொடர்வதன் மூலமே எம் தாய் மண்ணை மீளப் பெற முடியும். இன்னமும் சர்வதேசச் சமூகம் எமக்கு ஆதரவான நிலையை எடுக்கத் தயாராக இல்லை என்பது கவலைதரும் விடயம். ஆனாலும், நாம் முடங்கிச் செயலற்று இருந்து விட முடியாது.

எனவே பசி, தூக்கம், சோம்பலைப் பாராமல் விடுதலைப் போரை சளைக்காமல் மாவீரர் நினைவுகளுடன் தொடர உறுதி எடுப்போமாக!. மீண்டும் சந்திக்க விடைபெறும்...

**ஆசிரியர், அகரம் குழுமம்**





த. எதிர்மன்னசிங்கம்

# தமிழ் இனமே!
## சிந்தித்துப் பார்!

இன்றும் கூட ஈழத் தமிழரின் இனப் பிரச்சினைக்கு, 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்ட மாவட்ட ஆட்சி முறைதான் தீர்வு எனச் சம்பந்தன், சுமந்திரன் கூட்டம் பேசி வருகிறது. இவர்கள் இன்னும் ஒருபடி மேலே போய், 'அது இந்திய அரசின் குழந்தை, அதை இந்தியா உயிருடன் தருவது இந்திய அரசின் கடமை' என்றும் கூறி வருகிறார்கள். இக் கூற்று, பெற்ற தாயே தன் பிள்ளையை வாழ வைப்பது, பிள்ளைப்பேறு பார்த்த மருத்துவச்சியின் பொறுப்பு என்பது போலப் பேசி வருகிறார்கள்.

அப்படியானால் இந்தப் பிள்ளை, சொந்த அப்பன் பெயர் தெரியாத, தாய் பெயர் தெரியாத தமிழக அரசுத் தொட்டில் அல்லது குப்பைத் தொட்டியில் கிடைத்த பிள்ளையை, ஈழத் தமிழர் தலையில் கட்டிவிடப் பார்க்கிறார்கள் என்பதுதானே அர்த்தம். 1976இல் முப்பெரும் தமிழ் இனத்தின் அரசியல் தலைவர்கள் வட்டுக் கோட்டையில் தனி நாட்டுப் பிரகடனம் என்ன ஆயிற்று? அதன் அடிப்படையில் 1977 இல் பொதுத் தேர்தலில் பெற்ற மக்களின் ஆணை என்னவாயிற்று?

அதனை தலைமேல் ஏற்று உருவான தமிழ் இளைஞர்களின் விடுதலை இயக்கங்களும், போராட்டக் குழுக்களின் தியாகங்களும், பலியான உயிர்களும் இவர்களைப் பொறுத்த வரை எத்தகைய அரசியல் ?

அல்பிரட் துரையப்பா, அருளம்பலம், தியாகராசா, தர்மலிங்கம் போன்ற கணக்கற்ற பேர்களை இனத் துரோகிகள் எனப் பட்டம் சுமத்தி, உயிர்ப் பலி எடுத்து, தேர்தலில் வெற்றியும் பெற்று, எதிர்க் கட்சிப் பதவி பெற்று, இன்றுவரை சுக போகத்தில் பறக்கும் இவர்களின் அரசியலை எந்த வகையில் வைத்து மதிப்பிடுவது?

இதைத்தான் கொலைகாரக் கொள்ளைக் கார்களின் கூட்டமைப்பான தமிழர் தேசியக் கூட்டமைப்பும், இலங்கை - இந்திய அரசுகளின் எடு பிடி ஈழ விடுதலையை பேசி வரும் ஈ.பி.டி.பி., புளொட் போன்ற ஈழவிடுதலை என்கிற சொற்களை இன்னமும் தமது பெயர்களில் இறுகப் பிடித்திருக்கும் தமிழ் ஈழ அரசியல் தறுதலைகள் நிரூபிக்க முயலுகின்றன.

இவர்களைத் தமிழ் இனம் தனது அரசியல் தலைமையாக இன்னமும் ஏற்பது சரியா? அல்லது தேவைதானா? என்பதை சுய அறிவு படைத்த தமிழன் எவனும் சுய மதிப்பீடு செய்ய வேண்டாமா? அதைத்தான் இங்கே இக்கட்டுரை பார்க்க முனைகிறது.

2020 செப்.2 இல் வெளியான கொழும்பு ரெலிகிராப்ஃ என்கிற ஆங்கில இணையத்தில் பேராசிரியர் கீத பொன்கலன் அவர்கள் ‘13ஆவது திருத்தச் சட்டம்’ புதிய அரசியல் திருத்தச் சட்டத்தில் அழிக்கப் பட உள்ளதா? என்கிற தலைப்பில் அரசியல் ஆய்வுக் கட்டுரை எழுதி இருந்தார். அதில் எழுப்பிய முக்கிய விடயம் 13ஆவது திருத்தச் சட்டத்தின் எதிர் காலம் பற்றியது.

அக்கட்டுரையில் அவரால் எழுப்பப் பட்ட முக்கிய விடயம் ஆகஸ்ட் மாதம், 20ம் திகதி, புதிய அரச அதிபர் கோட்ட பாயா ராஜபக்ஷ பிரகடனப் படுத்திய முதல் கொள்கை விளக்கம் பற்றியது. அதில் இந்த நாட்டுக்குப் பொருத்தமான அரசமைப்புச் சட்டத்தை தமது அரசு உருவாக்கும் என்பதாகும்.


கீத பொன்கலன்


ப.சிதம்பரம்


எம்.பி.சுதர்சன நாச்சி அப்பன்

அதனால் எல்லா மக்களுக்கும் ஒரே நாடு, ஒரே சட்டம் என்கிற கருத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்’ எனத் தெரிவித்திருந்தார்.

பாராளுமன்றத் தேர்தலில் கிடைத்த மாபெரும் வெற்றி, 3இல் இரண்டு பெரும்பான்மை ஏற்படுத்த தேவையான பலம் என்பன, புதிய அரசமைப்பை உருவாக்க வல்ல 60 சதவீத மக்களின் ஆதரவை அரசு அனுபவிக்கிறது என்பன, அதிபருக்கு அமைப்பு ரீதியாக இலங்கை அரசையும், சமுதாயத்தையும் மாற்றி விட முடியும் என்கிற நம்பிக்கையை அரசு அனுபவிக்கிறது.

புதிய அரசமைப்புச் சட்டத்தை நீக்க வசதியாக இப்பொழுது உள்ள 19ஆவது திருத்தச் சட்டத்தைப் புதிய 20ஆவது திருத்தச் சட்டம் இடம் பெற்று விடும்.




**DORTMUND மாநகரத்திலே**
**தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும்**
**உணவுப்பொருட்களை மொத்தமாக**
**பெற்றுக்கொள்ள நாடுங்கள்**

StaR-Impex



பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்

## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net

Bringing Health to Life

இப்பொழுதுள்ள அரசமைப்புச் சட்டம் நீக்கப் பட்டதும், அதன் கீழுள்ள திருத்தச் சட்டமும் இல்லாமல் செய்யப்பட்டு விடும் என்கிறது அரசு தரப்பு தகவல்கள். எனவே, 19ஆவது திருத்தச் சட்டம் உயிருடன் உள்ள பொழுதே புதிய அரசமைப்புச் சட்டம் வரும் சாத்தியம் தர்க்கப் படி இல்லை.

உண்மையாகவே யதார்த்தத்தில் இது அரசுக்கு ஒரு மிக இனிப்பான நகர்வு. 19ஆவது திருத்தச் சட்டம் அரசுக்கு எரிச்சலூட்டும் திருத்தம். அதனால் நீக்கப்பட வேண்டும் என அது நினைக்கிறது. அதுதான் அரசின் முதன்மைத் தெரிவாக உள்ளது. அரசின் கூட்டணியிடம் 148 இடங்களே உள்ளன. அதற்குத் தேவையான 151 இலக்கை அடைய 3 இடங்களே தேவை. அவை எதிரணியிடம் உள்ளதால், அரசிடம் மிகக் குறைந்த அளவு அரசியல் பலமே அரசமைப்பைச் செய்ய தேவைப் படுகிறது.

ஆனால், அரசமைப்புத் சட்டத்தைத் திருத்தக் குறைந்த பட்சம் 1வருட தீவிர உழைப்பு அவசியம். அரசியலில் 1 வருடம் மிகப் பெரிய காலம். அதற்கிடையே எதுவும் நடந்துவிட முடியும். எனவே, 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவது இலகும் சுலபமும் ஆகிறது.

## இந்தியாவை நம்பும் தமிழர் தலைமைகள்

சில தமிழர் தரப்பினர் மாகாண சபைகளை அரசால் நீக்க முடியாது. காரணம், இந்தியா கண்டிப்பாக எதிர்க்கும், தமிழரைக் காப்பாற்றும் என வாதாடி வருகிறார்கள். அவர்கள் மாகாண சபைகள் இந்தியாவின் குழந்தை என நம்புகிறார்கள். அவர்களுக்கு இந்திய தூதராலயம் அண்மை செய்தியில் ‘13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமலாக்கப்படும் என அவர்கள் நம்புகிறார்கள். அந்த நம்பிக்கை அவர்களை அப்படிச் செய்கிறது.


அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11


அவர்கள் பெரும்பாலும் 2009 போரின் முடிவுகள் பற்றிய உண்மை வரலாற்றை அறியாதவர்களாகவே உள்ளனர்.

‘போரின் இறுதிக் கட்டத்தில் இந்தியாவும், இலங்கை அரசும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை அழித்து ஒழிக்கும் தேவை என்பதில் இணக்கமும், ஒத்துழைப்பதிலும் செய்து கொண்ட ஒப்பந்தம் போரின் கடைசி முடிவின் உச்ச கட்ட நடவடிக்கையாகும். அதற்காக அமைக்கப்பட்ட இலங்கை- இந்திய 3 உயர் அதிகாரிகளைக் கொண்ட ‘மூவரணி’யின் தலைவராக முன்னாள் இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் ஷிவ் ஷங்கர் மேனன் செயற் பட்டார்.

இந்த அணி போரின் பொழுது, பல தடவைகள் சந்திப்புகளை நடத்திப் போரை நெறிப்படுத்தினர். இதே ஷிவ் ஷங்கர் மேனன் மூவரணி முடியாது எனக் கருதப்பட்ட சாதனையை மூவரணி சாதித்துக் காட்டியது என்று சொன்னதாகச் செய்திகள் வெளியாயின. அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் வீழ்த்தப் பட்டதைத் குறித்தே அவ்வாறு கூறினார் என்பதில் உறுதியாக உள்ளதாகப் பேராசிரியர் கீத பொன்கலன் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஷிவ் ஷங்கர் மேனன் எழுதி வெளியிட்டுள்ள புத்தகத்தில், புலிகளை அழிப்பதற்குத் தமிழர் தரப்புத் தலைவர்களின் ஒத்துழைப்பு கிடைத்தக் காரணத்தால் சாத்தியமாகியது எனக் குறிப்பிட்டுள்ளார். அமைச்சுப் பதவிகளைக் கேட்டு க(கொ)லைஞர் கருணாநிதி தமிழகத் தமிழர்களின் எதிர்ப்பு அலைகளை இரும்புக் கரம் கொண்டு அடக்கினார்.





மத்திய அமைச்சர் ப.சிதம்பரமும் காங்கிரஸ் எம்.பி.சுதர்சன நாச்சி அப்பனும்

சம்பந்தன் கூட்டணியைக் கட்டிப் போட, தமிழ் இன அழிப்பு 2009இல் சாத்தியமானது. இந்திய அரசின் அறிக்கைகளும், வாக்குறுதிகளும் தமிழ் நாட்டு அரசியல் பொதுக் கருத்தைத் திருப்திப் படுத்த அள்ளிப் போடப் படுகின்றன.

எங்கள் தலைமைகள் குசு, குசுக் கூட்டம் நடத்தி விட்டுப் பொய் அறிக்கைகளைப் பொது ஊடகங்களில் பரப்பி விட்டு, கிடைக்கிற பணக் கட்டுகளைக் கறுப்புச் சந்தையிலும், கள்ள வங்கி கணக்குகளிலும் வைத்து விட்டு, மக்கள் முன் பிச்சைக்கார வேடம் போட்டு ஏமாற்றி வருகிறார்கள்.

இவர்கள் அத்தனை பேரும் உத்தமர் என்றால், 1947 இன் தொடக்கம் இன்று வரையான 74 வருடங்களில், தமிழ் மக்களுக்கு செய்த ஒரு நன்மை உண்டென்றால், அது அன்று தொடக்கம் இன்று வரை அவர்கள் தலைவர்கள், பொது மக்களாகிய நாம் உலக அரசுகளுக்குக் கொத்தடிமைகளாகி வீட்டுக் கோடியில் கூட மானத்தைக் காப்பாற்ற வழிஅற்ற நாடோடிகள் வாழ்க்கையில் தவிக்கிறோம்.

எமது அடுத்த தலைமுறை ஆகிலும் இந்த மோசடிக் கும்பல்களிடம் விடுதலை பெற்று, சர்வதேச அரங்கில் சுயமாகத் தனித் தமிழ் ஈழம் பெறப் போராடி, வெற்றி பெறவேண்டும். நமது அடுத்த தலைமுறைக்கு ஒற்றுமை கூட்டுச் செயல் திட்டமிடல், தகவமைப்பு இலக்கு ஒன்றே குறியாகக் கூட்டாகச் செயற்படுதல் என்பவற்றின் அவசியத்தை உணர வைத்து, எதிர்கால வெற்றிக்கு வழி சமைக்க வைப்போம்.

பகுதி.39

# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

இலங்கையில் மிகச் சிறந்த கட்டமைப்புக் கொண்ட அரசியல் நிர்வாகம் நடக்கக் கூடாதென்பதில் இலங்கைக்கான இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையின் உள்ளக சூழ்ச்சிமிகு இராஜதந்திரக் கொள்கை றோ மூலமாக மிகவும் சிறப்பாகவே நடத்தப்பட்டு வருகின்றது.

இக்கட்டுரையின் கடந்த பகுதிகளில் பலம் பொருந்திய நாடுகளின் உளவு நிறுவனங்கள் எவ்வாறு பலவீனமான பொருளாதார கட்டமைப்பினையும், நலிந்த இராணுவத்தையும், தேசிய உணர்வற்ற அரசியலாளர்களையும் கொண்டிருக்கும் நாடுகளுக்குள் பல்வேறு தொழில்சார் மனிதர்களாக ஊடுருவிப் புகுந்து, அங்கு ஒற்றர்கள் மூலமாக அத்தகு நாடுகளில் குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை விவரித்திருந்தேன்.

தேச விசுவாசமற்ற மனிதர்களாக மாற்றியமைப்பதற்கும், அவ்வாறான மனிதர்களின் பலவீனங்களைக் கண்டறிந்து, அதை அவர்களுக்குத் தீனியாகப் போட்டு, தமக்கு தேவையான இரகசியங்களை அறிந்து கொள்ளும் உபாயத்தைக் கையாள்வதற்குப் பணம், பொருள், பெண் என்ற மூன்று அம்புகளையுமே உளவு நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன.

அதிலும் குறிப்பாக பெண் ஒற்றர்களின் வலையில் விழுந்து, ஒரு நாட்டின் பெரும் இரகசியங்களை பெண்ணிற்காக கொடுத்த பல வரலாறுகள் உண்டு.

இலங்கையில் இன்னும் தொடர்ந்து நிலைகொண்டு இலங்கையின் அரசியல் கட்டமைப்பை நிலைகுலைய வைத்துக் கொண்டிருக்கும் இந்தியாவின் உள்ளக இராஜதந்திர சூழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வரும் றோ என்ற உளவு நிறுவனம், எவ்வாறான வேசங்களில் தனது ஒற்றர்களை மக்களோடு மக்களாக நடமாடவிட்டும், மக்களுக்குள் மக்களாக கலந்து இரகசியங்களை அறிந்து கொள்ளும் தந்திரத்தைப் பகுதி 38ல் எழுதியிருந்தேன்.

அதில் வீடுவீடாக துணி வியாபாரங்களில் ஈடுபடுகின்ற வியாபாரிகளில் பலர் றோவின் ஒற்றர்களாக, வியாபாரம் செய்யப் போகும் வீடுகளில் உள்ளவர்களின் அரசியல் சார்ந்த மனநிலை எவ்வாறு இருக்கின்றது? என்பதை கதையோடு கதையாகக் கறந்து, அத்தகவல்களை உளவு நிறுவனமான றோவுக்கு அளிக்கும் வேலைத் திட்டங்களைச் செய்து வருவதும், அவை சிறுதுளிகளாக பெய்யும் மழை எவ்வாறு பெருவெள்ளமாகப் பெருக்கெடுக்கிறதோ? அதுபோல ஆங்காங்கே பெறப்படும் சிறுசிறு தகவல்கள்கூட ஒரு திரட்டாகத் திரட்டப்பட்டு இலங்கையைக் கையாள்வதற்கு றோவுக்கு அவை பெரிதும் உதவுகின்றன.

சுற்றுலாப் பயணிகளாகவும், இலங்கையில் பெரும் வணிகத்தை நடத்துபவர்களாகவும், ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்களை நடத்துபவர்களாகவும், பேராசிரியர்களாகவும், மருத்துவர்களாகவும், தனியார் மருத்துவமனைகளை நடத்துபவர்களாகவும், மிகச்சிறந்த விடுதிகளை நடத்துபவர்களாகவும், பிரபலமான உணவு விடுதிகளை நடத்துபவர்களாகவும் ஆயிரக் கணக்கான இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவர்கள் இலங்கையில் நிலை கொண்டிருக்கிறார்கள்.

இக்கட்டுரையை வாசிப்பவர்கள், எமது அயல்நாட்டினை சந்தேகக் கண்கொண்டு பார்க்கலாமா? என்ற எண்ணம் அவர்களின் மனதில் தோன்றலாம்.

ஆனால், இலங்கையில் மிகப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் அரசியல் குழப்ப நிலையையும், அதற்குக் காரணமாக இருக்கின்ற இன ஐக்கியமின்மையையும், முரண்பாடுகளையும் உற்று நோக்கும் போது ஆய்வாளர்கள் இந்தியாவின் பக்கமே தமது பார்வையைச் செலுத்துவார்கள். இந்தியா சதி செய்கின்றது என்பது அறிவு ஜீவிகளுக்குத் தெளிவாகவே புரிகின்றது. ஆனால், சாதாரண இலங்கைக் குடிமகன் நம்பத் தயாரில்லை.

எப்பொழுதுமே இலங்கையில் வசிக்கும் சாதாரண மக்கள் அன்றாட வாழ்வில் தம்மோடு உறவாடிக் கொண்டிருக்கும் இந்தியாவோடு தொடர்புடைய பண்பாட்டு அலகுகளை, அங்கிருந்து இலங்கைக்கு வருகின்ற சஞ்சிகைகள், பத்திரிகைகள், திரைப்படங்கள் போன்றவற்றினாலும் இந்தியாவுக்கு சுற்றுலாப் பயணிகளாகச் செல்கையில் அங்கு அவர்களுக்கு ஏற்படும் இனிமையான அனுபவ வாயிலாகவும் இந்தியா மீது இலங்கையர்களுக்கு ஒரு பற்று அல்லது வாஞ்சை ஏற்படுவது இயல்பானதே!. அதிலும் குறிப்பாக இலங்கைத் தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழகத் தமிழர்களைத் தமது தொப்புள் கொடி உறவு என்று சொல்லிக் கொள்கிறார்கள். இதுவே இலங்கையில் குழப்பநிலையை உருவாக்கும் நெம்புகோலாகும்.



**HOLLAND SHIPPING**
**CARGO SERVICES**

# வேலைக்கு ஆட்கள் தேவை...

வெற்றிடம்

- Nederlands (for administrative assistant)
- Denmark
- Sweden
- Germany (Dortmund & Berlin)
- Belgium

ஆகிய இடங்களில்
உள்ள ஆண்கள், பெண்கள்
விண்ணப்பிக்கலாம்

Holland Shipping
Cargo Services

+31 452 088 143
+31 628 476 769

## அடுத்த கப்பல்

அக்டோபர் 25
நவம்பர் 20

தயவு செய்து பொதிகள் அக்டோபர் 10ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை ஒப்படைக்க வேண்டும்.

www.hollandshippingcargo.com

இந்தப் பற்றும் வாஞ்சையும், இந்தியாவிடம் இருக்கும் வரை எப்பொழுதுமே இலங்கையர்கள் இந்தியா மீது வெறுப்புக் கொள்ள மாட்டார்கள் என்ற திடமான நம்பிக்கையை இலங்கையர்கள் இந்தியாவுக்குக் கொடுத்து வருவதாலும், இந்தியா தமக்கு எவ்வித துரோகமும்; செய்யாது என்ற அதீதமான நம்பிக்கையாலும், அதனைத் தமக்குச் சாதகமாகவும் பயன்படுத்தி வருகின்றது. இந்தியக் குடிமகன் ஒருவரை இலங்கையில் எந்தவொரு இடத்தில் கண்டாலும் நம்மவர் என்று இலங்கைக் குடிமகன் ஒருவன் இயல்பாக நினைக்கும் நினைப்பினையும் இந்தியா தமக்குச் சாதகமாகவே தக்க வைத்துக் கொண்டது.

உளவு நிறுவனங்கள் பிச்சைக் காரர்களையும் தமது ஒற்றர்களாக பயன்படுத்தி வருகிறார்கள் என்ற உண்மை பலர் அறியாமலிருக்கலாம். இத்தகு அணுகுமுறை என்பது உலக நாடுகள் எங்குமே இடம்பெறும் உளவு வேலைத் தந்திரமேயாகும். அதற்கு இலங்கை விதிவிலக்கு அல்ல.

கொழும்புத் தெருக்களிலும், இலங்கையின் அனைத்து மாகாணங்களில் உள்ள பெரிய நகரங்களிலும் ஆங்காங்கே பிச்சைக்காரர்கள் பிச்சையெடுத்துக் கொண்டிருப்பதைக் காணலாம்.

இவர்கள் அனைவருமே வருவாயின்றி, அதனால் உணவின்றி பிச்சையெடுக்க வந்தவர்கள் அல்ல. அவர்களில் ஆகக் குறைந்தது ஒருவராவது உளவு நிறுவனத்தின் ஒற்றர்களாக இருப்பதற்கு வாய்ப்புண்டு.

பிச்சைக்காரர்கள், தமக்கருகில் நின்று கதைத்துக் கொண்டிருப்பவர்கள் எதைப்பற்றிக் கதைக்கிறார்கள்? என்பதை உன்னிப்பாகக் காது கொடுத்து கேட்பதும், அக்கதைகளில் தாம் யாருக்காகப் பிச்சைக்காரர் வேடமிட்டு பிச்சையெடுப்பதாக நடிக்கிறோமோ, அவர்களுக்குத் தேவையான தகவல்கள் இருக்கிறாதா? எனக் கண்டறிந்து அவற்றை உள்வாங்கி, உளவு நிறுவனத் தொடர்பாளர்களிடம் சொல்லி விடுவார்கள்.

ஒரு சராசரி மனிதன் தான் அறிந்து கொள்ளும் இரகசியங்களை, செய்திகளை, தகவல்களை தமது நெருங்கிய நண்பர்களுக்கு இயல்பாகச் சொல்லும் போது, அது பிச்சைக்காரர்கள் இருக்கும் இடமானால், அந்த இடத்தில் பிச்சைக்காரன் வேடமிட்டு ஒற்றர் ஒருவர்




இருப்பாரானால், அவர் அதனை மிகவும் உன்னிப்பாக காது கொடுத்துக் கேட்பார்.

கதைத்துக் கொண்டிருப்பவர்கள் ஏதோ இலங்கை அரசு சம்பந்தப்பட்ட விடயங்களைத்தான் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை காது வழியாக உணர்ந்த போதும், அது தெளிவாக கேட்காத பட்சத்தில், அந்த ஒற்றரான பிச்சைக்காரன்; கதைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு தன்மீது சந்தேகம் ஏற்படாத வகையில் நொண்டிக் கொண்டோ, தலையைக் காலைச் செரிந்து கொண்டோ அவர்களுக்கருகில் சென்று, அவர்களிடமே பிச்சை போடுமாறு கேட்டு, அந்த இடத்தில் உட்கார்ந்து விடுவான்.

அரசுக்கு எதிராக இரகசியமாக எதிர்க்கட்சிகள் எடுக்கும் நடவடிக்கையையோ அல்லது தமிழர்களுக்கு எதிராக சிங்களத் தலைமைகள் எடுக்கப் போகும் நடவடிக்கையையோ அல்லது தமிழர்களுக்கு எதிராக புத்தமத நிறுவனங்களோ அல்லது இனவாத அரசியல்வாதிகள் எடுக்கப் போகும் நடவடிக்கையையோ அல்லது சிங்களவர்களுக்கும் அரசுக்கும் எதிராக தமிழர்களும், தமிழ் அரசியல்வாதிகளும் எடுக்கப் போகும் நடவடிக்கையையோ அல்லது அரசுக்கெதிராக முஸ்லீம்கள் எடுக்கும் நடவடிக்கையையோ அல்லது முஸ்லீம்களுக்கு எதிராக சிங்கள மக்களும், சிங்கள அரசியல் தலைமைகளும் எடுக்கும் நடவடிக்கைகளையோ கதையாளிகள் தமக்குள் தாம் பலர் மூலமாக அறிந்து கொண்டவற்றைப் பகிர்ந்து கொள்வாரானால், அதைப் பிச்சைக்காரன் வேடமிட்டு உட்கார்ந்திருக்கும் ஒற்றன்;, பிச்சையெடுப்பதில் மட்டுமே கவனமாக இருப்பது போல பாசாங்கு செய்து கொண்டே தனது பிச்சைப் பாத்திரத்தை வருவோர், போவோரிடம் நீட்டிப் பிச்சையெடுப்பது போல நடித்து, கதையாளிகள் சந்தேகப்படுவதற்கு எந்தவொரு இடத்தையும் கொடுக்காதவாறு நடந்து கொள்வான்.

இது இரகசியம் யாரிடமும் சொல்லாதே என்ற இரகசியம், பிச்சைக்கார ஒற்றன் மூலமாக உளவு நிறுவனத்திற்கு கொண்டு



செல்லப்படுகின்றது என்பதை கதையாளிகள் உணர்வதற்கு எச்சாத்தியமுமே இருக்காது.

பிச்சைக்கார ஒற்றனுக்கருகில் நின்று கதைத்தவர்கள் உதாரணமாக இலங்கையில் இடம்பெறப் போகும் குண்டுவெடிப்பு இரகசியம் கசிந்ததைக்கூட சாடைமாடையாக கதைத்துமிருக்கலாம். வதந்தி என்று அவர்கள் கதைத்தாலும்கூட, அந்த வதந்திகூட உளவு நிறுவனங்களுக்கு மிக முக்கியமான தகவலாகும்.

இலங்கையில் குண்டுவெடிப்புகள் நடைபெற்ற பின்னர் வந்த அரசதரப்புச் செய்திகளாகட்டும், அரசுசார்புப் பத்திரிகைச் செய்திகளாகட்டும், அரசை விமர்சித்தும், கண்டித்தும் எழுதும் பத்திரிகைகளாகட்டும் குண்டுவெடிப்பு இடம்பெறப் போவதை தமது புலனாய்வாளர்கள் மூலமாக இந்தியாவும், அமெரிக்காவும், ஸ்கொட்லாண்ட் உளவுப் பிரிவும் அறிந்து, இலங்கையை எச்சரித்திருந்தது என்ற செய்தியை வெளியிட்டிருக்கும்.

அப்படியானால் இந்தச் செய்தி பல்வேறு புலனாய்வு நிறுவனங்களுக்கு குண்டுவெடிப்பு இரகசியம் எப்படிக் கிடைத்தன? யார் மூலம் கிடைத்தன?.

இதில் இந்திய றோ என்ற உளவு நிறுவனத்தின் வகிபாகம் என்ன?. இந்திய அரசும், றோவும் வேறு வேறானவை அல்ல, இலங்கையில் றோவின் உளவாளிகள் ஒற்றர்கள் இலகுவாக தமது செயல் திட்டங்களை நிறைவேற்ற அவர்களுக்கான இலங்கையிலிருந்து இலகுப் பாதைகள் எவை எவை?.

**(தொடரும்)**

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

பாகம் - 20



# யூதர்களின் உத்தி

கி.மு. 598 -இல் பாபிலோனியப் பேரரசு இசுரேல் நாட்டைத் தாக்கி, யூதர்களின் கோவிலை தரைமட்டமாக்கி, யூதர்களைப் பாபிலோனுக்கு நாடு கடத்தினர். அன்றைய காலகட்டத்தில் அனைவரும் பல்வேறு தெய்வங்களை வணங்கி வந்தனர். ஒரு நாடு, இன்னொரு நாட்டிடம் தோற்றால், அதற்குக் காரணம் அந்த நாட்டின் இறைவன் தங்கள் நாட்டு இறைவனைவிட பலசாலி என்றே பார்க்கப்பட்டது. தோற்றுப்போன மக்கள் முடிவில் பலசாலியான கடவுளை வணங்கி, ஆக்கிரமித்த நாட்டில் கரைந்து போனார்கள். அன்று தோற்றுப்போன யூதர்களும் பெரிய உளவியல் சிக்கலில் மாட்டி, அதுபோன்ற அழிவை எதிர் நோக்கினர்.

அவர்களின் கடவுள் தோற்றுப் போய்விட்டார் என்று கருதினால் அவர்களின் அடையாளம் அழிந்து போகும். இதுதான் அன்றைய யூத அறிவு சீவிகள் எதிர்நோக்கிய முக்கிய சிக்கல். இதிலிருந்து அவர்கள் தப்பிக்க வகுத்த உத்திதான் "உலகை ஆளும் ஒற்றைக் கடவுள்" என்ற தத்துவம். பாபிலோனியர்களிடம் இசுரேல் தோற்றதற்குக் காரணம், இசுரேலியர்களின் கடவுள் வகுத்த ஆணைகளை மக்கள் பின்பற்றாததனால் தான்.

அதனால் கடவுளின் கோபத்திற்கு உள்ளாகி, கடவுள் எதிரிகளை அனுப்பி பழி வாங்குகிறார். நமது கடவுள் இசுரேலுக்கான கடவுள் மட்டுமல்ல, உலகத்தையே ஆளும் ஒற்றைக் கடவுள். அவரின் கட்டுப்பாட்டில்தான் அனைத்து நாடுகளும், உலகமும் இயங்குகிறது. நாம் கடவுளின் ஆணையைப் பின்பற்றினால், நாம் இழந்தது அனைத்தும் கிடைக்கும் என்று யூத அறிவுசீவிகள் விளக்கமளித்தனர்.

இந்த ஒரு விளக்கத்தின் மூலம் ஒரே கல்லில் பல காய்களை வீழ்த்தினார்கள்.

1.அவர்களின் கடவுள் தாழ்ந்தவர் அல்ல. அதற்கு மாறாக உலகிலேயே அவர்தான் வல்லமையானவர். அவர் ஒருவர்தான் கடவுள், மற்ற நாட்டு கடவுளரெல்லாம் வெறும் பொம்மைதான். அவர்களுக்கு ஏற்பட்டது தோல்வியே அல்ல. அதை அவர்களின் கடவுளின் சக்தியின் வெளிப்பாடாகக் கொண்டு,

தோல்வியை அவர்களின் வெற்றியாக மாற்றினர். இதன் மூலம் தோல்வி உளவியலிலிருந்து அவர்கள் வெளி வந்தனர்.

**2.** தோல்விக்குக் காரணம் கடவுளின் ஆணையை ஒழுங்காகப் பின்பற்றாதுதான் காரணம் என்பதன் மூலம், மக்களைத் தீவிர நம்பிக்கையில் செலுத்தி அடையாளத்தைக் காத்தனர். அதற்கேற்றபடி சீர்திருத்தங்கள் கொண்டு வந்தனர். இதனை அடிப்படையாகக் கொண்டே அவர்களின் கட்டுக்கதைகளையும், வரலாற்றையும் உள்ளடக்கி பைபிளை எழுதினார்கள். தோல்வியால் அவர்கள் நம்பிக்கை இழக்கவில்லை, மாறாக நம்பிக்கை முன்பைவிட பன்மடங்கு அதிகரித்தது.

**3.** இழந்த நாடு மீண்டும் கிடைக்கும் என்ற நம்பிக்கை.

**4.** பாபிலோனியர்கள் யூதர்களின் கோவிலை இடித்தனர். அதற்கு பழிக்குப் பழியாக பாபிலோனியர்களின் கடவுளைத் தாழ்த்த வேண்டும். அதை அவர்கள் "தங்களின் கடவுள் மட்டுமே கடவுள், மற்றதெல்லாம் பொம்மை" என்று கூறி பழிவாங்கினர். இது அவர்களுக்கு பழிவாங்கிய உளவியல் திருப்தியை அளித்தது. முடிவில் அன்று அவர்கள் வகுத்த இறை கோட்பாடுகளை இன்று பாதி உலகம் நம்பிக்கொண்டிருக்கிறது.

இந்த இறை கோட்பாட்டை அன்றைய யூதர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு குறிப்பிட்ட தொகையினர் மட்டுமே ஏற்றுக் கொண்டனர். மற்றவர்கள் இவர்களைத் தூற்றினார்கள். இதுபோன்ற




நம்பிக்கைகள்தான் நமது இவ்வளவு துன்பத்திற்கும் காரணம் என்றனர். முடிவில் நம்பிக்கை கொண்ட யூதர்கள் மட்டுமே மிஞ்சினர், மற்றவர்கள் கரைந்து காணாமல் போயினர்.

அவர்களைவிட பலம் வாய்ந்து விளங்கிய பண்டைய பாபிலோனியர்களோ, எகிப்தியர்களோ, ரோமர்களோ, அறிவிற்சிறந்த கிரேக்கர்களோ இன்றில்லை. ஆனால், யூதர்கள் இன்றும் இருக்கிறார்கள். இதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்றால் வலிமை என்பது நீடித்து இருப்பதல்ல. எந்த ஒரு நாடோ, பண்பாடோ காலப்போக்கில் வலுவிழக்கும். அவ்வாறான வலுவற்ற நிலையில் அவர்கள் அழியாமல் தாக்குப்பிடிக்கிறார்களா? என்பதே அவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கிறது.

யூதர்களின் விடாப்பிடியான நம்பிக்கையே அவர்களைக் காத்து வந்திருக்கிறது. எப்பொழுதெல்லாம் அவர்கள் பாரிய பின்னடைவு அல்லது தோல்வி ஏற்படுகிறதோ, அப்பொழுதுதான்



அவர்களின் நம்பிக்கையே கூடும். ஆனால், மற்றவர்களுக்குத் தோல்வி என்பது நம்பிக்கையைக் குறைக்கும். இதுதான் யூதர்களின் வெற்றிக்குள் இருக்கும் ஒரு இரகசியம். இரண்டாயிரம் ஆண்டுகளாக நாடில்லாமல் திரிந்தாலும், நம்பிக்கையினால் நாட்டை மீண்டும் அடைந்தனர்.

யூதர்கள் கையாண்ட உத்திகள் பார்ப்பதற்கு சிரிப்பாகத் தோன்றினாலும், நாம் உணரவேண்டிய ஒன்று என்னவென்றால், மனிதனின் உளவியல் அன்றிலிருந்து இன்றுவரை மாறவில்லை. மனிதன் அதே மனநிலையில்தான் உள்ளான். அதனால் உலக தேசியங்களும் இதே மனநிலையிலேயே செயல் படுகின்றன. யூதர்கள் என்ன உத்திகளை பயன்படுத்தினார்களோ? அதே உத்திகளை தேசியங்கள் அவர்களின் சூழலுக்கு ஏற்ப மாற்றி பயன்படுத்துகின்றன.

உலகிலுள்ள ஒவ்வொரு தேசியமும், தங்களது வரலாற்றை உன்னதமாகவே எண்ணுகிறது. உலகில் எந்த ஒரு நாட்டின் வரலாறும் தோல்வி மனப்பான்மையுடன் எழுதப்பட்டிருப்பதை நீங்கள் பார்க்கவே முடியாது. இது ஒவ்வொரு தேசியத்தின் அடிப்படை உளவியல் தேவை. இது ஏனென்றால் தேசியம் என்பது ஒருவனின் அடையாளமான “நான்” என்பதில் ஐக்கியமாகி விடுகிறது. அதனால் ஒருவன்



தனது தேசியத்தைத் தாழ்வாக நினைப்பது, அவன் தன்னையே தாழ்வாக நினைப்பது போன்றதாகும். அது நடக்கமுடியாத காரியம். எப்படி தன்னைத் தாழ்வாக நினைக்கும் மனிதர்கள் உளவியலால் பாதிக்கப்பட்டு, தற்கொலை செய்து கொள்கிறார்களோ. அதுபோல தனது வரலாற்றைத் தாழ்வாகக் கருதும் தேசியமும் அழிந்துபோகும்.

இதனால்தான் எந்த ஒரு நாட்டின் பள்ளி வரலாற்றுப் புத்தகங்களும் தங்களது வரலாற்றை உன்னதப்படுத்தி மேன்மையாகவேக் கூறும். வரலாற்றுப் புத்தகங்கள் மாணவர்களிடம் தேசிய அடையாளத்தை உருவாக்கி, தேசிய சிந்தனையை வளர்ப்பதற்காகவே உருவாக்கப்பட்டவை; தேசிய வரலாற்றில் உண்மை என்பது இரண்டாவது பட்சம்தான் என்பதை வரலாற்று ஆசிரியர்களே ஒப்புக் கொள்கிறார்கள்.

இந்த உளவியல் சிந்தனையைப் போர்களிலும் காணலாம். ஒவ்வொரு நாடும் தனது இழப்புகளைக் குறைத்தும், எதிரிகளின் இழப்பைக் கூட்டியும் காண்பிக்கும். போரில் எதிரிகளால் தோற்கடிக்கப் பட்டோம், நாங்கள் எதிரிகளைவிட தாழ்ந்தவர்கள் என்று எந்த தேசியமும் ஒப்புக்கொள்ளாது. அவ்வாறு தோல்வி ஏற்பட்டாலும் அதைத் திட்டமிட்ட பின்னகர்வு என்றே கூறும். இதுவும் வரலாற்றாசிரியர்கள் ஏற்றுக் கொள்ளும் உண்மை.

ஒவ்வொரு நாடும் தனக்கென்று ஒரு பொற்காலம் வைத்திருக்கும், அதைப் போற்றிப் புகழும். அது பெரும்பாலும் கட்டியமைக்கப்பட்ட பொய்யாகவே இருக்கும். உதாரணமாக இந்துத்வா தேசியர்கள், புராணக் கதைகளை எடுத்துக்கொண்டு, அன்று “விமானங்கள்” இருந்தன, “ஏவுகணைகள்” இருந்தன. உலகிலேயே நாம்தான் அனைவரையும் விட முன்னேறிய நாடாக இருந்தோம் என்று பொற்காலக் கதைகளைக் கூறுவார்கள். இதுபோன்ற பொற்காலக் கட்டுக்கதைகளை அனைத்து தேசியச் சிந்தனைகளிலும் காணலாம்.

இவ்வாறு ஒரு தேசியம் கூறுவதற்கானக் காரணம் என்பது உளவியல் ரீதியாக மக்களிடம் நம்பிக்கை ஏற்படுத்தி, அவர்களைத் தூண்டி எதிர்காலத்தில் ஒரு

“பொற்காலம்” காண்பதே!. உதாரணமாக அமெரிக்க அதிபர் தேர்தலில் “அமெரிக்காவை மீண்டும் உன்னதமாக்குவோம்” என்று பரப்புரை



செய்துதான் திரம்பு வெற்றி கொண்டார். அவ்வாறே பில் கிளிண்டனும் பரப்புரை செய்தார்.

வரலாற்று ஆசிரியர்கள் பொதுவாக ஏற்றுக்கொள்வது என்னவென்றால்: தேசத்தின் வரலாறு என்பது ஏதோ பழையது, எந்தவொரு விளைவும் இல்லாதது அன்று. ஒரு தேசிய இயக்கம் தேசத்தின் எதிர்காலத்தை இறந்த கால வரலாற்றின் சாயலில் உருவாக்க முயல்கிறது. ஒரு தேசத்திற்கு எதிர்காலம் எவ்வளவு முக்கியமோ, அதேபோல இறந்தகால வரலாறும் முக்கியம்; தேசத்தின் பொன்னான இலக்கு எவ்வளவு முக்கியமோ, அதேபோல தேசத்தின் பழைய பொற்காலமும் முக்கியம். நாம் ஒருவகையில் வரலாற்றின் பிடியில் சிக்கியுள்ள கைதிகள். நாம் எதுமாதிரியான வரலாற்றை எடுத்துக் கொள்கிறோமோ? அது நமது உளவியலைத் தூண்டி, நமது எதிர்கால செயல்பாடுகளைத் தீர்மானிக்கும்.

இதனால்தான் ஒவ்வொரு தேசமும் தனது வரலாற்றை உன்னதமாக எழுதி, ஒவ்வொரு பின்னடைவையும் தனது வரலாற்றில் வெற்றியாகப் பதிவு செய்து முன்னேறுகிறது. அவ்வாறு செய்யும் தேசங்கள் வாழ்கின்றன. தோல்வி மனப்பான்மையில் இருக்கும் தேசங்கள் விரைவில் அழிந்து போகின்றன. அவ்வாறுதான் மனிதர்களின் உளவியல் பரிணாமத்தால் கட்டியமைக்கப் பட்டுள்ளது.





சண் தவராஜா

# மனுஷங்கடா... நாங்க மனுஷங்கடா...







மக்கள் கவிஞர் இன்குலாப் அவர்களால் எழுதப்பட்ட கவிதையின் தலைப்பு வரிகள் "'மனுஷங்கடா, நாங்க மனுஷங்கடா..." 1968 டிசம்பர் 25இல் தமிழ்நாட்டின் 'கீழ்வெண்மணி' எனும் இடத்தில் ஆதிக்க சாதியினரால் 44 பட்டியலின மக்கள் எரித்துப் படுகொலை செய்யப்பட்டமையை ஒட்டி எழுதப்பட்ட கவிதை இது. சாதியக் கொடுமையின் தன்மையை விளக்கும் வகையிலான இந்தக் கவிதை, சாதியத்துக்கு எதிரான போராட்டங்களில் தவிர்க்க முடியாமல் பாடப்படும் ஒரு பாடலாக உள்ளது.

தமிழ்நாட்டில் ஒலிக்கும் இந்தப் பாடலை யாழ்ப்பாணத்தில் உள்ள ஒருசில சாதிய வெறியர்களுக்கும் நினைவுப்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. காரணம், அண்மையில் வட்டுக் கோட்டை-அரசடி என்னும் இடத்தில் நடைபெற்ற ஓர் சம்பவம்.

சாதிய அடுக்கில் தம்மை உயர்ந்தவர்கள் என நினைத்துக் கொண்டிருக்கும் ஒரு சாரார், தம்மால் சாதிய அடுக்கில் தாழ்ந்தவர்கள் எனக்

கருதப்படும்; மற்றொரு சாரார் மீது மேற்கொண்ட கொலைவெறித் தாக்குதல்கள், அதனால் எழுந்துள்ள பதற்றநிலை போன்றவை 60களுக்கு முந்திய யாழ்ப்பாணக் குடாநாட்டை நினைவுப்படுத்துவதாக உள்ளது.

செப்டெம்பர் மாதம், 19ஆம் திகதி இரவு நடைபெற்ற தாக்குதலுக்கு ஒரு சாராரின் மேலாதிக்க மனோநிலையைத் தவிர, விசேட காரணம் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. இந்தத் தாக்குதலின் போது இருவர் காயங்களுக்கு ஆளாகியுள்ளனர். மற்றொருவரின் கடை சிதைக்கப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ள மக்களின் உந்துருளிகள், ஈருருளிகள், தகர வேலிகள், கதவுகள் என்பவை வாள்களால் வெட்டிச் சிதைக்கப்பட்டுள்ளன. அனைத்துக்கும் மேலாக அச்சம் நிறைந்த சூழ்நிலையில் வாழும்படி அந்த மக்கள் நிர்ப்பந்திப் படுத்தப் பட்டுள்ளனர்.

வழக்கம் போன்றே, இந்த விடயத்தை ‘இரண்டு குழுக்களுக்கு இடையிலான வன்முறை’ என்ற தலைப்பில் செய்தியாக்கி, யாழ் ஊடகங்கள் தங்கள் சாதிய சார்பு நிலைப்பாட்டை மற்றொருமுறை பிரகடனம் செய்து கொண்டுள்ளன. சாதிய எதிர்ப்பு மனநிலையைக் கொண்ட ஒரு சிலர் கூட, ‘இவ்வாறான விடயங்களைப் பெரிதுபடுத்தி நிலைமையைச் சிக்கலாக்கி விடக் கூடாது” என்ற நிலைப்பாட்டுடன் மௌனம் காத்து வருகின்றனர்.

‘சாதிய மோதல்கள் யாழ் குடாநாட்டின் அன்றாட நிகழ்வுகளில் ஒன்று. வாராவாரம் அங்கொன்றும், இங்கொன்றுமாக நடந்து கொண்டுதானே இருக்கின்றது” எனக் கூறிக் கடந்து போகின்றவர்கள் அநேகர். ‘இந்த விடயத்தில் தலையீடு செய்யப் புறப்பட்டால், ஏதோ ஒரு தரப்பைப் பகைக்க வேண்டிய நிலை உருவாகலாம். எனவே, பாராமல் இருப்பதே நல்லது” என நினைத்து தம்மைச் சுருக்கிக் கொள்ளும் அரசியல்வாதிகள் மறுபுறம்.

சில வருடங்களுக்கு முன்னர், அவுஸ்திரேலிய குடிமகனான ஒரு தமிழ் இளைஞன், போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் இந்தோனேசியாவில் மரண தண்டனையை எதிர்கொண்டு இருந்தவேளை, அவனை விடுதலை செய்ய வேண்டும் என உலகளாவிய அடிப்படையில் குரல் தந்த தமிழினப் பற்றாளர்களில் ஒருவர் கூட வட்டுக் கோட்டை-அரசடியில் தாக்குதலுக்கு இலக்காகிய தமிழர்கள் தொடர்பாக அனுதாபம்கூடத் தெரிவிக்காமல் போனது ஏன்?



Cash & Carry

**Kranichweg 8, 3074 Muri Bei Bern**
☎ 031 951 24 44

Baslerstrasse 102, 8048 Zürich - Switzerland
Tel : +41 43 343 03 55   Fax : +41 43 343 03 56
email : info@importas.ch   Web : www.importas.ch

# IMPORTAS CENTER

**எம்முடன் இணைந்து கொள்ள விரும்பும் ஆர்வமுள்ள வியாபாரிகள் தேவை...**

**200+**
**பார்க்கிங் வசதியுடன்**






**உங்கள் வியாபாரத்தை அமைப்பதற்கான இடவசதியுள்ளது.**

மேலதிக கடைகளை அமைக்க விரும்பினாலும் தொடர்பு கொள்ளவும்.

+41 78 883 21 99 | info@globalstoreag.ch | Importas Oftringen

‘கல் தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்தகுடி’ என எதற்கெடுத்தாலும் பெருமைபேசும் தமிழினம், சாதியத் தாக்குதல்கள் என்று வரும்போது மட்டும் மௌனமாகக் கடந்து போவது எதனால்? அடிப்பவனும் தமிழன், அடிவாங்குபவனும் தமிழன் எனில், ஒருவனை அடிக்கலாம் என மற்றவன் நினைப்பதன் அடிப்படை எது? சிங்கள இனத்தின் அடக்குமுறைக்கு எதிராக வீர முழக்கம் எழுப்பும் தமிழ்த் தேசியவாதிகள், எடுத்ததெற்கெல்லாம் போராட்டம் அறிவிக்கும் ‘அட்டைக் கத்திப்’ போராளிகள் இதுபோன்ற சமூக ஒடுக்கு முறைகளைக் கண்டுகொள்ளாமல் போவது தற்செயல் நிகழ்வா?

வட்டுக்கோட்டை-அரசடி நிகழ்வை ஊடகங்களோ, அரசியல்வாதிகளோ கண்டுகொள்ளாமல் போன நிலையில், பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் ஒரு அடையாள கவன ஈர்ப்பு நிகழ்வு நடத்தப்பட்டிருந்தது. அந்த நிகழ்வில் கொழும்பில் இருந்து வருகைதந்த காவல்துறை உயர் அதிகாரி ஒருவர், 'தாக்குதல் நடத்தியவர்களை விரைவில் கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்துவோம்” என வாக்குறுதி அளித்த பின்னரும், இன்றுவரை மூன்றுபேர் மாத்திரமே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அது மாத்திரமன்றி குறித்த அதிகாரி வட்டுக்கோட்டை முதல், யாழ்ப்பாண நகரம் வரை நடைபெறத் திட்டமிடப் பட்டிருந்த ஆர்ப்பாட்டப் பேரணியைத் தடுப்பதிலேயே குறியாக இருந்து, வெற்றியும் பெற்றார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வல்லமை மிக்க விடுதலைப் புலிகள் அமைப்பையே வெற்றிகொண்ட சிங்கள புலனாய்வுத் துறையால், சம்பவதினம் தாக்குதலில் ஈடுபட்ட 50 தொடக்கம் 60 வரையானோரைக் கைது செய்ய முடியாமல் உள்ளது என்றால் நம்ப முடிகின்றதா?

அதைவிடப் பரிதாபம், பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில்



வாதாட, பிரபல சட்டத்தரணிகள் எவரும் முன்வராமை. சமூகத்தின் காவலர்களாக வேடமிட்டு, அரசியலில் பிரவேசிக்கும் சட்டவாளர்கள், சமூகநீதியின் காவலர்களாக தம்மை அடையாளம் காட்ட விரும்பாத நிலை, அன்று முதல் இன்றுவரை தொடரவே செய்கின்றது. ‘அப்புக்காத்துகளின் கட்சி’ எனப் பெருமை பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி கூட இதில் விதிவிலக்கல்ல.

யாழ் குடாநாட்டில் சாதியக் கொடுமைகள் ஒன்றும் புதிய விடயம் அல்ல!. 'சைவமும், தமிழும் எமது இரு கண்கள்” என்ற பசப்பு வார்த்தைகளின் உள்ளே ஒழித்து வைக்கப்பட்டுள்ள வர்ணாசிரமத்தின் கூறுகளுள் ஒன்றான சாதியப் படிநிலை ஈராயிரம் வருடங்களுக்கும் மேலாகத் தொடருகின்ற ஒரு அவலம்.

மிகவும் இறுக்கமாக இருந்த சாதியப் பிடிமானம் *1966* அக்டோபர் *21*இல் நடைபெற்ற ‘அக்டோபர் எழுச்சி’ என வர்ணிக்கப்படும் சுன்னாகத்தில் தொடங்கி, யாழ்ப்பாண நகரில் முடிவடைந்த பேரணியின் பின்னரே தளர்வு கண்டது. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினால் 'சாதி அமைப்பு தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்” என்ற கோசத்துடன் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் இடதுசாரிகள் உள்ளிட்ட தோழமை இயக்கங்களும் பங்கு கொண்டிருந்தன.

பின்னாளில், ஆயுதப் போராட்டம் வீச்சோடு நடைபெற்ற காலகட்டத்தில்

அமுங்கிப் போயிருந்த சாதிய அடக்குமுறை, 2009இன் பின்னான காலத்தில் மீண்டும் வலுப்பெற்று உள்ளமையைப் பார்க்க முடிகின்றது.

ஒரு வகையில் பார்த்தால், சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான இயல்பான போராட்டங்களின் வலுவைக் குறைத்ததில் ஆயுதப் போராட்டத்திற்கும் பங்கு உள்ளதாகவே கருத முடிகின்றது. சுதந்திரமான அரசியல் நடவடிக்கைகளுக்கான வாய்ப்பு மறுக்கப் பட்டிருந்த சூழல், ஆயுதப் போராட்டம் வெற்றி பெற்றால் சாதியம் தானாகவே ஒழிந்துவிடும் என்ற மூட நம்பிக்கை, தாம் கட்டமைத்துள்ள 'தமிழ்த் தேசியப் பெருமை' சீர்குலைந்துவிடும் என்ற அச்சம் காரணமாக சாதிய அடக்குமுறை தொடர்பான விடயங்களைப் பேசாப் பொருளாக வைத்திருந்த நிலைமை உள்ளிட்ட பல காரணங்கள் இன்றைய அவல நிலைக்குக் காரணமாக உள்ளன.

தற்போதைய நிலையில் சாதிய அடக்குமுறைக்கு எதிரான காத்திரமான போராட்டங்களை முன்னெடுக்கும் வலுப்பெற்ற சக்திகள் எவையும் கண்ணுக்குத் தெரியவில்லை. முன்னைய காலகட்டங்களில் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலித்த பொதுவுடமை இயக்கங்களின் குரல்கள், வலுவிழந்த நிலையில் உள்ளன. அது மாத்திரமன்றி பஞ்சமர்கள் மத்தியில் முன்னர் இருந்த ஐக்கியமும் தற்போது காணாமற் போயிருக்கின்றது.






அடிமைத் தனத்தில் இருந்து விடுபடுவதற்கான முதற்படியே, ஒருவன் அடிமையாக இருக்கிறான் என்பதை உணர்வதில் இருந்துதான் ஆரம்பமாகின்றது. இங்கே தாங்கள் இரண்டாம் தரமாக நடத்தப் படுகின்றோம் என்பதை உணராதவர்களாகவே அநேக மக்கள் உள்ளனர். 'பூனை கண்ணை மூடிக் கொண்டால், உலகம் இருண்டாதாக ஆகிவிடாது' என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை, அல்லது புரிந்து கொள்ள விரும்ப வில்லை.

தாழ்த்தப்பட்ட மக்கள் காலவோட்டத்தில் பல்வேறு தடைகளையும் தாண்டி, சமூகத்தின் பல்வேறு துறைகளில் முன்னேறி உள்ளனர். அவ்வாறு முன்னேறிய பலரும் தமது கடந்த காலத்தை மறந்தவர்களாக, மறைத்தவர்களாக வாழ முனைகின்றனரே அன்றி, தமது சமூகத்தை அந்த அவலத்திலிருந்து மீட்க நினைப்பவர்களாக, அதற்காகப் போராடுபவர்களாக இல்லை.

காலம் எப்போதும் வெற்றிடத்தை விட்டு வைப்பதில்லை. காலம் ஒருநாள் மாறியே தீரும். எத்தனை காலம் காத்திருக்க நேரிடும் என்பதுவே தற்போது எம்முன் உள்ள கேள்வி. அதுவரை உரத்துச் சொல்வோம்

**'மனுஷங்கடா, நாங்க மனுஷங்கடா**
**உன்னைப் போல, அவனைப் போல**
**எட்டுச் சாணு ஒசரமுள்ள...**
**டேய் மனுஷங்கடா, நாங்க மனுஷங்கடா..."**


வாடிக்கையாளர்களின் பேராதரவுடன் 20ஆம் ஆண்டில்....
மாபெரும் ராஜ முத்திரை
SK
SINCE 2003
S.K. Silks & Gold Paradise
ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648



# நாட்டியத்தோற்றம்

## புராண வரலாறு



திருமதி. லிதியா மயூரன் அவர்கள் சுவிஸ் நாட்டில் பிறந்து இருந்தாலும், தமிழ் மொழியைக் கற்றுத் தேர்ந்தார். சிறுவயதிலிருந்தே பரதக்கலை மீது கொண்ட காதலினால் தீரா மோகத்துடன் பரதத்தை முறையாகக் கற்று, இன்று ஆசிரியராக 'ஜதிகளின் நர்த்தனாலயம்' என்னும் நாட்டியப் பாடசாலையையும் நடாத்தி வருகின்றார். அது மட்டும் இல்லாமல், இங்கிலாந்து கிரிஃபின் கல்லூரியானது உலகளாவிய ரீதியில் கலைஞர்களுக்கானக் கலை விருது முதல் நிகழ்வை, முதன்முறையாக அக்டோபர் 2021இல் நடாத்தியது. இதில் பரத கலைக்கான விருதை, சுவிஸ் நாட்டில் பிறந்து வளர்ந்த, நாட்டிய ஆச்சாரிய, நாட்டிய கலாஜோதி திருமதி. லிதியா மயூரன் அவர்களுக்கு "கலாவிபன்சி" விருதை வழங்கிக் கௌரவித்துள்ளது.

திருமதி லிதியா மயூரன் அவர்கள் இனிவரும் காலங்களில், சுவிஸ்சில் இயங்க இருக்கும் கிரிஃபின் கல்லூரியின் பரீட்சைகளுக்கான சுவிஸ் ஒருங்கிணைப்பாளராகவும் கடமை யாற்றவுள்ளார். 'ஜதிகளின் நர்த்தனாலய' ஆசிரியை திருமதி. லிதியா மயூரன் அவர்கள் எதிர்கால சந்ததியினரும் பரத கலையை விருப்போடும், ஆத்மாத்மமாகக் கற்க வேண்டும் என்பதே அவரது நோக்கம் ஆகும். அகரம் சஞ்சிகை மூலமாக, பரத கலைப் பற்றி எம்மமோடு மாதம் தோறும் இணைந்து கொண்டு பரதம் எவ்வாறு தோண்றியது என்ற அடிப்படையில் இருந்து ஆற்றுகை (அரங்கேற்றம்) வரை எங்களுடை ய அகரம் சொந்தங்களோடுப் பகிர்ந்து கொள்ள உள்ளார்.



## நாட்டியத்தோற்றம் புராண வரலாறு

அறுபத்து நான்கு கலைகளுள் பரதக்கலை ஒன்றாகும். புராண காலத்தில் வேதங்களை மக்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. நான்கு வேதங்களில் இருந்து இந்திரன் பிரம்மாவை வேண்டி உருவாக்கப்பட்டதே பரதக்கலை ஆகும். நான்கு வேதங்கள் உண்டு: இருக்கு வேதம், யசூர் வேதம், சாம வேதம், அதர்வன வேதம்.

இருக்கு வேததில் இருந்து பாட்டினையும், யசூர் வேததில் இருந்து அபிநயத்தையும், சாம வேததில் இருந்து இசையையும், அதர்வன வேததில் இருந்து ரசத்தினையும் தொடுத்த பிரம்மா, ஐந்தாம் வேதமாக நாட்டிய கலையை படைத்தார்.

பிரம்மா நாட்டியக்கலையை முதன் முதலில் பரதமுனிவருக்கு கற்பித்தார். பரதமுனிவர் கந்தர்வர் மற்றும் அப்ஸரஸ் போன்றோருக்கு கற்பித்தார். பின் கைலயங்கிரியில் சிவன் முன்னிலையில் நிருத்தம், நிருத்தியம் மற்றும் நாட்டியம் என்பவற்றை அரங்கேற்றினார். சிவன் தனக்கே உரித்தான தாண்டவத்தைப் பரதமுனிவருக்கு கற்ப்பிக்கும் படி நந்திகேஸ்வரருக்கு ஆணையிட்டார்.

சிவன் பார்வதிக்கு “லாஸ்யம்” என்னும் நாட்டியத்தை அருளினார். இதைப் பாணனின் மகளும், அனுருத்திரனின் மனைவியுமாகிய உஷைக்கு கற்றுக் கொடுத்தார். உஷை துவாரகையில் உள்ள இடைச்செரிப் பெண்களுக்குக் கற்பித்ததன் மூலம் இக்கலை உலகெங்கும் பரவியது.

**அடுத்த இதழில் சந்திப்போம்....**




# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?



**இந்த வருடம் செப்.19ம் திகதி, இலங்கை அதிபர் கோட்டபாயா ராஜபக்ஷ, ஐ.நா. பொதுச் சபையில் பேசும் பொழுது, ஐ.நா.பொதுச் செயலரிடம் ஒரு வாக்குறுதி வழங்கினார். புலம் பெயர் தமிழருடன் ஒரு உள்ளகப் பொறிமுறை உருவாக்கி, உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கப் போவதாக அவர் வாக்குறுதி இருந்தது.**



இந்த வாக்குறுதி எவ்வளவு போலியானது என்பதை, இதே புலம்பெயர் தமிழரில் சில புலம்பெயர் தமிழர்களையும், அமைப்புகளையும் பெப்.25, 2021 அரசாங்க வர்த்தமானி மூலம் தடை செய்யும் அறிவித்தலை செய்திருந்தார் என்கிற உண்மையைக் கொண்டு எளிதாகச் சொல்லி விடலாம்.

இதே வேளையில் இலங்கை-இந்திய மற்றும் உலக அரசுகள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பையும், அதனை ஆதரிக்கும் பரப்புரைகளை யாரும் செய்ய முடியாதவாறு, தொடர்ச்சியாக 2009க்குப் பின்னரும் தடைசெய்து வைத்துள்ள நிலையில், இலங்கை அதிபரின் இந்தப் பேச்சு ஐ.நா. பொதுச் சபையில் இடம் பெற்றுள்ளது. இதன் பின்னணியில் உள்ள மர்மம் என்ன?

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் தினமும் வலுப்பெற்று வருகிறது. தென்னிலங்கையில் அம்பாந் தோட்டை கடலும், துறைமுகமும் தொடக்கம், வடக்கில் இந்திய கடல் பரப்பும், கச்ச தீவும், மன்னாரும் கொழும்பில் செயற்கைத் தீவும், துறைமுக நகரம் மற்றும் இலங்கை இராணுவ முகாம் வசம் உள்ள பல நிலப் பரப்புகளும் சீனாவின் கைகளுக்குள் சிக்கி விட்ட நிலையில், அதிபரின் உள்ளக தீர்வுப் பேச்சு வந்திருக்கிறது. இவருக்கு இலங்கை அதிபர் என்கிற சர்வ தேசப் பாதுகாப்பு கவசம் இல்லாது இருக்குமானால், ஒரு சர்வ தேசப் போர்க் குற்றவாளி என்கிற முறையில் எங்காவது வெளிநாட்டுச் சிறையில் கம்பி எண்ணிக் கொண்டிருப்பார்.

2019 ஏப்ரில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொழும்பிலும், கிழக்கு மாகாணத்திலும் நடத்திய தொடர் குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரியாகச் செயற்பட்டு, அதனை பௌத்த சிங்களவருக்கு எதிரான பாதுகாப்பு அச்சுறுத்தல், அதற்கு தன்னைப் போன்ற உறுதியான தலைவரின் வழிநடத்தலே அவசியம் எனப் பிரச்சாரம் செய்து, தீவிர பௌத்த சிங்கள

பேரினவாத உணர்வுகளைச் சிங்கள மக்களிடையே உருவாக்கி பெற்ற வெற்றி.

அவரது வெற்றியை உறுதி செய்ய, முஸ்லிம் மக்களின் வாக்குகள் எதிரணிக்கு சென்று, தனது வெற்றியைத் தடுத்து விடக் கூடாது என்பதற்காக, முஸ்லிம் வேட்பாளரை நிற்க வைத்து, பதவியைப் பிடித்தவர். அவர்தான் ஐ.நா.பொதுச் சபையில் அந்த அண்டப் புழுகை அவிழ்த்து விட்டுள்ளார். இந்தப் பூனை எந்தப் பாலையும் குடிக்கவில்லை என்பதை நம்பும் அளவுக்கு இது முட்டாள்களின் சொர்க்கம் அல்ல. ஆனால், சிங்களத் தலைமைகளின் வழமையான கோமாளித் தனத்தின் வெளிப்பாடு சர்வதேச அரங்கில் இடம் பெறத் தவறுவதில்லை.

இலங்கையின் பொருளாதாரம் படுபாதாளத்தில் நெருங்கிச் சிதைந்து, மக்களின் அன்றாட வாழ்க்கைப் போரட்டங்களே வீதிக்கு வரத் தொடங்கி விட்டன. நாட்டின் பிரதமர், முன்னாள் அதிபர் எரிபொருள் விலை ஏற்றத்தை எதிர்த்துப் பாராளுமன்றத்துக்குச் சையிக்கிளில் பவனி வந்த காட்சி மற்றும் மாணவர்-ஆசிரியர்கள் போராட்டங்கள் என நாடே கல்யாணக் களை கட்டியுள்ள நிலையில் இந்தக் கில்லாடியின் வாக்குறுதியில் ஐ.நா.நனைந்து கிடக்கிறது.

**இப்படியான உலகத்தில் எமக்கான குரலைத் தனி ஒரு மனிதராக முன்னாள் நீதியரசரும், வட மாகாண முதலமைச்சரும், இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க.விக்கினேஸ்வரன் மே.19ந் திகதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் பின் வரும் கோரிக்கையுடன் முடித்திருந்தார்.**

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களின் துன்ப துயரங்களுக்கு ஒரு முடிவு கட்டப்பட வேண்டியது முக்கியமாகும். அதற்காக சர்வதேச கண்காணிப்பில் வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் பேசும் மக்கள் கருத்தெடுப்பு நடத்தப்பட வேண்டும். அத்தகைய ஜனநாயக முறை ஒன்றுதான் சர்வதேச சமூகம் இலங்கையில் அமைதியையும், இணக்கப்பாட்டையும் உறுதிப்படுத்த முயும்.

இதற்கான முனைப்பை வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு விரைந்து முடிக்க அமெரிக்காவும், பிரித்தானியாவும் மட்டும் அல்ல , கனடா, இந்தியா, அவுஸ்திரேலியா ,ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜனநாயகத்தையும், ஜனநாயக கட்டமைப்புகளையும் மதிப்பளிக்கும் ஏனைய நாடுகளும் உறுதி செய்ய வேண்டும்.’

மேலும் திரு விக்கினேஸ்வரனின் உரை கடுமையான தொனியில் பின்வருமாறு அமைந்திருந்தது:-

**கடந்த 12 வருடங்களாக பல மனித உரிமை மீறல் குற்றங்களைப் போரின் பொழுது இழைத்த இராணுவம், தொடர்ந்தும் நிறுத்தி வைக்கப் பட்டிருப்பதன் தேவை பற்றிய ஆய்வுகளச் செய்யப் பணிக்கப்பட சர்வதேச இராணுவச் சட்ட நிபுணர்கள அடங்கிய குழு ஒன்றினை அமைக்க வேண்டிய தருணம் வந்து விட்டது.**



அரசாங்கம் புலிகள் அமைப்பு இல்லை என்று பகிரங்கமாக உறுதியளித்து விட்டது. எமது நாட்டில் எவ்விதமான வன்முறைகளும் வடக்கு, கிழக்கில் இருப்பதற்கான அறிகுறிகள் இதுவரை இல்லை என்று எமது நாட்டுக்கு அரசு உறுதி தந்திருக்கிறது. அப்படியானால் , எதற்காக வடக்கு, கிழக்கில் இராணுவம் தொடர்ந்தும் இருக்க வேண்டும்? ஒரு ஜனநாயக நாட்டில் பாதுகாப்புக் காரணங்கள் என்ன என்று சொல்லாமல், பாதுகாப்புக் காரணங்கள் என வெறுமனே சொன்னால் போதாது.

இராணுவம் 60,000 ஏக்கர் அரச காணிகளையும், 3,000 ஏக்கர் தனியார் நிலங்களையும் பாழடித்து வைத்திருப்பதைக் காண்கிறோம். இராணுவம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ மீன் பிடித்தல், விவசாயம், வர்த்தகம், வளங்களைக் கொள்ளை இடுதல் போன்றவற்றில் ஈடுபடுவதைக் காண்கிறோம்.

பிற இடங்களில் இருந்து வருபவர்கள் வடக்கு, கிழக்கில் நிலங்களை அபகரிக்க அவர்கள் உதவி செய்வதையும் காண்கிறோம். பழைய வரலாற்றைத் திரிக்க முற்படுபவர்களுக்கு அவர்கள் ஆக்கமும், ஊக்கமும் வழங்குவதையும் காண்கிறோம்.

குறிப்பாக ஏழ்மையில் தவிக்கும் எமது இளந் தலைமுறையினரின் வறுமை மற்றும் ஆற்றாமை நிலைகளைப் பயன்படுத்தி, எங்கள் மக்களை அவர்கள் மூளைச் சலவை செய்ய முற்படுகிறார்கள். எனவே, இராணுவம் போர் முடிவுற்று 12 வருடங்கள் சென்ற பின்னரும், தொடர்ந்தும் நிலை கொண்டிருக்க பாதுகாப்புக் காரணங்கள் நியாயமான நோக்கமாக இருக்க முடியாது.

எங்களுக்கு உண்மைக் காரணங்கள் சொல்லப்பட வேண்டும். அக்காரணங்களைச் சர்வதேச இராணுவச் சட்ட வல்லுனர் குழுவால் ஆராயப்பட வேண்டும். இப்படி ஒரு வலுவான கிடுக்கிப் பிடியை திரு.விக்கினேஸ்வரன் இலங்கைப் பாராளுமன்றத்தில் வைத்துள்ள நிலையில், அதிபர் கோட்ட பாயா புலம்பெயர் தமிழர்களுடன் பேசித் தீர்வு காணப் போவதாக ஐ.நா. பொதுச் சபையில் கதையளந்து காட்டுகிறார்.

உள்நாட்டுத் தீர்வு, உள்நாட்டுப் பொறிமுறை எனப் பேசி ஏமாற்றிய சிங்களத் தலைவர்களை இனிச் சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்துவதில் திரு விக்கினேஸ்வரனின் கவனம் உறுதியாக இருப்பதை அவரது அண்மைக் காலப் பேச்சுகள் எமக்குப் புதிய தென்பைத் தருகின்றன.

அவருக்கு ஆதரவான அரசியலைச் சர்வதேச ஈழத் தமிழர்களின் அரசியல் செயற்பாட்டாளர்கள் ஒற்றுமையுடன் செயலாற்றி, எமது தாயக மண் விடுதலையை வெற்றி பெற வைக்க வேண்டும் என அகரம் உலகத் தமிழ் மக்களிடம் கேட்டு நிற்கிறது.




# Tilda




11-10-2021 இருந்து 15-02- 2022 வரை

# 50 000€

## ஐம்பதாயிரம் ஈரோக்கள் பெறுமதியான பயணப் பரிசுகள் வெற்றி பெறுவதற்கான போட்டிகள் !

## பரிசுகளை வெல்லுங்கள்



**5000€**
பெறுமதியான 5 பயணங்கள் மற்றும்

**500€**
பெறுமதியான 50 விமானச் சீட்டுகளை வென்றுகொள்ள முனையுங்கள் !




## எவ்வாறு போட்டியிடுவது ?




1.பரிசு கூப்பன் ஒட்டிய Tilda பாஸ்மதி அரிசி பை வாங்க வேண்டும் !

2. QR குறியீட்டை "ஸ்கேன்" செய்யுங்கள் !



3.பதிவு செய்யுங்கள் !



4.வெற்றி பெற்றீர்களா என்பதை உடனே தெரிந்துகொள்ளுங்கள்!

Prize Draw, subject to purchase of Tilda products, organized by Tilda Ltd, from 11/10/21 to 15/02/22 for consumers over 18 years old living in France, Germany or Netherlands. Terms and conditions on www.tildapromotion.com

# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்

“உளம் திறக்கும் உண்மைகள்...” என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

### வலி

**எல்லோரையும்**
**சிரிக்க வைத்து**
**ரசிப்பவர்கள் - உள்ளே**
**வலியால் துடிப்பவர்கள்.**

### வழி

**வாழும் வாழ்க்கையில்**
**வலி கண்டு ஓடாமல்**
**வழி கண்டு வாழ்வதே மேல்**

**நந்து, இலண்டன்**

### மனித நேயம்

மனிதம் இன்றி
மனிதன் பணத்திற்காக
எதையும் செய்வான்.
நடைமுறையில் கண்கூடு
மனித நேயம் எனப் பிதற்றி,
தன் சுய நலம் பூர்த்தியாக்கி,
மனித மூளையை கழுவித்
துடைத்து,
மெழுகு பூசி விட்டு,
முகிழ்ந்து கொள்ளும்
மனிதர் சமூகத்தில் பெரியோர்.
யார் கேட்பார்
இவற்றை.
மக்களே விழித்துக்
கொள்ளுங்கள்
இல்லையெனில் விரைவில்
புதைத்து விடுவார்கள்.

**கெங்கா ஸ்ரான்லி**

### நியதி..

உன்னை வீழ்த்தும் அளவிற்கு
விதி எழுதப்பட்டால்
விதியை வீழ்த்தும்
வழியும்
எழுதப்படும்...

### வாழ்தல்..

வறண்ட கைகளில்
நிறையும் நீராய்
நான் இருக்கிறேன் எனும்
வார்த்தை

### உயிர்...

காற்று இருந்தும்
பறக்கத்
தெரியாமல் அங்கும் இங்கும்
அடிபடும் பந்தாய்
பறக்கவும் தெரியாமல்
விட்டு வெளியேறவும் முடியாமல்..

**பாமினி, பேர்லின்**



# அகர கவிக்களம்....



## தெளிவு!!

தெளிவது கூட
எளிதானது தான்...
மீண்டும்
கலங்காமல் பார்த்து
கொள்வது தான்
திறமை..!

## சிறப்பு!!!

வார்த்தைகளை விடமௌனமும்
வன்முறையை விட அமைதியும்
வெறுத்து ஒதுக்குதலை விட
அன்பு செலுத்தி புரிய வைப்பதும்
மிக சிறந்த ஆயுதம் தான்...
ஆனால் நாம் பிரயோகிப்பவர்
புரிந்து கொண்டாலே சிறப்பு..!

**அபி, இத்தாலி**

## தேடல்!..

பாதி உயிர் பிரியும்போதும்
சாதியினைத் தேடுகின்றாய்
நீதி இன்றி, நியாயம் இன்றி
நீ உலகில் வாடுகின்றாய்!..



## தாய்!..

ஒரு பழைய சேலையுடன்
காலத்தை ஓட்டும் தாய்
கோவில் யானைக்கு
விலை உயர்ந்த பட்டாடை
கொடுத்து புண்ணியம் தேடும் மகன்!..

## மாற்றம்!..

கொரோனாவின் தாக்கம்
அழகான மரச்சவப் பெட்டி
காட்போட் பெட்டிக்கு
மாற்றம் கண்டது!..



## பேனா!..

வரிசையில் வந்து காத்து நிற்கும்
வார்த்தைகளின் கழுத்தைப் பிடித்து
காகிதத்தில் உட்கார வைத்து
அழகு பார்ப்பதுதான் பேனா!..

**வைரமுத்து சிவராசா, யேர்மனி**

# என்ன கொடுமை சரவணா!...



கல்லெறி வேலுப்பிள்ளை

**வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?**

**மாவீரர் மாதமும் வந்திட்டுது பாருங்கோ. மண்ணுக்காக உயிரை ஆகுதியாக்கிய புலி வீரர்களை நினைவு கூரும் மாதமாக இந்த நவம்பர் மாதம் இருக்குது பாருங்கோ. தாயகத்தில மாவீரர் துயிலும் இல்லங்களைக் கூட இடித்து அழித்து சிங்களம் தனது திறமையைக் காட்டிப்போட்டுது பாருங்கோ. ஆனால் மாவீரரை நினைவு கூரும் மனங்களை யாராலயும் அழிக்க இயலாது எண்டதுதானே நியதி.**

இந்த இடத்தில தான் வரலாறு முக்கியம் எண்டுறது எல்லாருக்கும் விளங்க வேணும் பாருங்கோ. ஆனால், எங்கட பிள்ளையளுக்கு நாங்கள் சொல்லி குடுக்கப்போற வரலாற்றுப் பாடப்புத்தகத்தில முழு இருட்டடிப்பு செய்துபோட்டம். மாவீரர் வரலாறு இருக்க வேண்டிய இடத்தில சிங்கள வரலாறு இருக்குது. இதைவிடவும் எதையும் சீரழிக்க முடியுமோ எண்டு கேட்டால் இல்லை எண்டு தான் சொல்லவேணும் பாருங்கோ. கேட்டால் சொல்லுற விளக்கங்கள் ஆயிரம் பாருங்கோ.

அண்மையில நடந்த வானொலி விவாதத்தில புத்தகத்துக்கு பொறுப்பா இருந்து வழி(து)வறி(ழி)நடத்தின கனடா நாட்டு பிரமுகர் அடிச்ச வெள்ளை காலத்துக்கும் அழியாத வெள்ளை பாருங்கோ. யாழ் நூலக எரிப்பு பற்றி நீங்கள் ஏன் தெளிவா குறிப்பிடேல்லை எண்டு கேட்டால், அதை பிள்ளைகள் கேள்வியா கேட்கவேணுமாம், அதுக்குப்பிறகு ஆசிரியர்கள் விளங்கப்படுத்துவினமாம் எண்டு அடிச்சுவிட்டார் பாருங்கோ. எனக்கு அஞ்சும் கெட்டும் அறிவும் கெட்டுப்போச்சு பாருங்கோ.

வெளிநாட்டில பிறந்த பிள்ளையளுக்கு ஊரில நடந்தது பற்றி தெரிந்து கேள்வி கேட்குற அறிவு இருக்குதோ அல்லது, அப்பிடி ஒரு நிகழ்வு நடந்தது பற்றி ஏதாவது தெரியுமோ எண்டு கேட்டால் அதுக்கு இவை பதில் சொல்லாயினம் கண்டியளோ. 55 சொல்லுக்குள்ள தான் பாடம் இருக்க வேணுமாம் எண்டு ஒரு சீறுவாணம் விட்டார் பாருங்கோ.

ஐயோ அது வெடிச்ச வெடியில உலகமே அதிர்ந்துபோச்சு. 55 சொல்லுக்குள்ள தான் பாடம் இருக்க வேணும் எண்டு யாராவது எந்த நாட்டிலையாவது சட்டம் போட்டிருக்கினமோ அல்லது, இரண்டு சொல்லு கூட வந்தால் படிக்கமாட்டன் எண்டு எந்தப்பிள்ளையாவது சொன்னதோ பாருங்கோ

உவங்களின்ர உருட்டு சுத்து மாத்துக்கு ஒரு அளவில்லை. அடுத்ததா இன்னொரு முனைஞ்சவர் வந்தார். இஞ்ச இருக்கிற மக்களில 90 வீதம் தமிழர்கள் பலர் முனைஞ்சவர்களாகவே இருக்கினம் எண்டது எப்பிடி எண்டு விளங்கேல்லை பாருங்கோ. திரிபு படுத்தப்பட்ட பாடநூல் பற்றி அவர் சொன்ன விளக்கம் பயங்கரமா இருந்திச்சுது பாருங்கோ.

அமெரிக்க மற்றும் மேற்குலகக் கல்விக் கொள்கை மாறீட்டுது எண்டும் அதுக்கேற்ற மாதிரித்தான் இப்ப வந்திருக்கிற தமிழ்ப் பாடநூல் இருக்குது எண்டும் அடிச்சு விட்டார் பாருங்கோ. அதுக்குப் பிறகு தான் தெரிஞ்சுது இவன் பாவி எவ்வளவு தூரம் அறிவிலி எண்டது. மேற்குலகக் கல்விக்கொள்கை ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் மாறி வருது எண்டது உண்மைதான் பாருங்கோ. ஆனால் அது தொழிற்கல்வி மட்டும் தான் பாருங்கோ.

பொறியியல், மருத்துவம், வர்த்தகம், அரசியல் ஆகிய கல்விமுறைகள் தான் பாருங்கோ ஐந்து வருடங்களுக்கொரு முறை மாறிவருகுது. தமிழ்ப்பிள்ளையள் அந்தந்த நாடுகளில் தொழிலுக்கான கல்வியையும் கற்றுக்கொண்டு தான் இருக்கினை. வரலாறையும் மொழியையும் சேர்த்து மொழிக் கல்விக்குள் பயின்று வருகினம் பாருங்கோ. மொழிக்கல்வி கற்கிறது. ஏனெண்டால்; எங்கட தாய் மொழியையும் வரலாற்றையும் மறக்கக்கூடாது எண்டதுக்காகத் தான் கண்டியளோ.

மொழிக்கல்வியை வைச்சு எங்கையும் தொழில் செய்யமுடியாது எண்டுறதோட மொழிக் கல்வி ஒருபோதும் மாறாது பாருங்கோ. இவன் பாவி என்னெண்டால், தொழிற்கல்வி மாற்றத்தையும், மொழிக் கல்வியையும் குழப்பியடிச்சு பெரிய முட்டைத் தோசை போட்டு விட்டான் பாருங்கோ. ஆங்கிலத்தில இரண்டு சொல்லுச் சொன்ன உடன, எங்கட ஆக்கள் பயந்தடிக்கிறது வழமை தானே. அதை நல்லாப் பயன்படுத்திக்கொண்டு, இரண்டு பேரும் கதை கதையா அடிச்சுவிட்டங்கள் பாருங்கோ.

பாடநூலாக்கற் குழுவுக்குள்ள எப்பிடி ஈபிடிபி யின்ர பேராசிரியர் வந்தார் எடத்துக்கு இன்னும் பதிலில்லை கண்டியளோ.




அவரைக்கூட்டியந்து வரலாற்றைத் தலைகீழா எழுதினது ஆர் எண்டதுக்கும் பதில் இல்லை பாருங்கோ. போதாக்குறைக்கு, மாவீரர் துயிலுமில்லம் நிமிர்ந்து நிற்பது பற்றி எழுதினது ஆர் எண்டதுக்கும் பதில் இல்லை பாருங்கோ. சிங்கள மன்னர்களது ஆட்சியோடு தான் இலங்கையின் வரலாறு ஆரம்பிப்பது போல எழுதப்பட்டது ஏன் என்பதற்கும் பதில் இல்லை பாருங்கோ.

இனப்படுகொலை பற்றிய தகவல்கள் மறைக்கப்பட்டது ஏன் எண்டுறதுக்கோ, தமிழர்களின் இடப்பெயர்வை அகச்சூழல் புறச்சூழல் எண்டு காரணம் காட்டியது ஏன் என்பதற்கோ பதில் இல்லை கண்டியளோ. ஆனால் தவறை மறைக்க தாங்கள் இரண்டு பேரும் வந்து தனித்தவில் வாசிச்சிட்டுப் போக இடம் குடுத்த வானொலியின்ர திறமையையும் மெச்சத் தான் வேணும் பாருங்கோ. ஏனெண்டால் ஒரு பக்கம் சாய்ஞ்சு நிண்டு சிங்கியடிக்கிறது தான் இப்ப பல ஊடகங்களின்ர வழமை. இல்லையெண்டால் நிண்டு பிடிக்கிறது கடினம் எண்டு அவைக்கும் தெரியும் தானே பாருங்கோ.

முதலில பாடநூலில திரிபு எதுவும் இல்லையெண்டு கதைவிட்ட ஆக்கள், இப்ப நாங்களும் பிழையள் கண்டு பிடிச்சிருக்கினம் எண்டு கொண்டு திரியினம் பாருங்கோ. திரிபு இருக்கெண்டால் புத்தகத்தை மீளப்பெற வேண்டியதுதானே என்று கேட்டால் அதற்குப் பதில் கிடையாது பாருங்கோ. நஞ்சு கலந்த சாப்பாட்டைச் சாப்பிடக் கொடுத்துப் போட்டு, கொஞ்சம் கொஞ்சமா சாப்பிட்ட வரை மீட்பம் எண்டால் ஏற்றுக்கொள்ளுற பதிலோ உது எண்டதை நீங்களே சிந்திச்சுப் பாருங்கோ.

திரிபுப் படுத்தப்பட்ட பாடநூலை மீளப்பெறாமல், இஞ்ச இப்ப 2022 ல மாற்றுவம், 2023 ல போத்துவம் எண்டு கொண்டு திரியினை பாருங்கோ. ஆனால் மாவீரர் நாளை குறியா வைச்சு பணவசூல் ஆரம்பிச்சிட்டுது கண்டியளோ. இவங்களின்ர அடிப்படையே பிழைபாருங்கோ. அந்நிய ஆட்சியையும், தமிழ்மொழியும் தமிழர்களும் அழிக்கப் படுவதற்கு எதிராகத்தான் மாவீரர்களாகிய புலிவீரர்கள் போராட ஆரம்பித்தார்கள். அவர்களின்ர கொள்கைக்கும் இலட்சியத்திற்கும் முரணாக ஓர் தமிழ்ப் பாடநூலை அறிமுகம் செய்து போட்டு, பிறகேன் உவையள் மாவீரர் நாள் நிகழ்வு ஏற்பாடு செய்யினமோ தெரியேல்லை பாருங்கோ.

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எண்டு ஒரு அடிப்படை இருக்குது கண்டியளோ. அது தமிழீழ விடுதலைப் புலிகள் வகுத்த பாதையின் படிதான் எப்பவும் இருக்க வேண்டும். நவீன கல்விக் கொள்கைக்கு ஏற்ப அதை மாற்றுறதுக்கு அது ஒண்டும் காய்கறி விற்பனை விலை மாற்றம் இல்லை கண்டியளோ. உதெல்லாம் விளங்கியும் விளங்காத மாதிரி இருக்கிறவங்களை என்ன செய்யுற தெண்டதை நீங்களே யோசியுங்கோ..

**"தாயினும் இனிய நம்**
**மண்ணைப் பறித்தான்**
**தமிழினம் வேரோடு**
**விழ நாள் குறித்தான்**
**தீயினும் வலிய நம்**
**ஆற்றல் மறந்தான்**
**சிறுத்தை உன்னால் இவன்**
**அழியப் பிறந்தான்"**

**- அப்ப வரட்டே**





யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி
Jasmine Silk House
2022ஆம் ஆண்டின் புதிய டிசைன்களில், சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள் மற்றும் அனைத்து கவறிங்
நகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்
Fester Str.50, 40882 Ratingen
Tel : 021 028 447 44
Mob. : 0173 1937 325
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

தேவன்

இன்னோர் தமிழனப்படு கொலையை நடாத்த

# ஓரணியில் கைகோர்க்கும் மேற்குலகமும், திராவிடமும்...



தமிழினப்படுகொலை 2009இல் உச்சமாக நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை, காங்கிரசோடு கூட்டுச் சேர்ந்திருந்த கருணாநிதி நிறுவனமான திமுக, தமிழின அழிப்பை நடத்திக் கொண்டிருந்த காங்கிரசை எதிர்த்து எவ்விதமான நடவடிக்கைகளிலும் இறங்காதது அனைவரும் அறிந்ததே!. மகளுக்கும், மகனுக்கும் பதவி கேட்டுப் பிச்சைப் பாத்திரம் ஏந்திய கருணாநிதி,



சாக்குப் போக்காக ஓர்நாள் உண்ணா விரதத்தை மேற்கொண்டார். அத்தோடு அவர் மீது புனையப்பட்டிருந்த தமிழினப் பற்றாளர் என்ற சாயம் கலைந்துபோனது.

தற்போது திராவிட ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தமிழினத்திற்கெதிரான மறைமுக வேலைகளில் ஈடுபடும் திராவிட முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் கடந்த வாரம், நோர்வேயின் சார்பாக 2002 - 2008 வரை புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட வேளையில் தூதுவராகப் பணியாற்றிய எரிக் சொல்கைமைச் சந்தித்து உரையாடியிருக்கிறார்.

எரிக் சொல்கைம் அவர்கள், தமிழினப்படுகொலை நிகழ்வதற்கு ஏதுவாயிருந்து இழைத்த தவறுகள் குறித்து ஆய்வாளர் ***Gunnar*** என்பவர் கீழ்க்கண்டவாறு தெரிவித்திருந்தார்.



**"விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எனது நெருங்கிய நண்பர், அவர் சாமர்த்தியமான தீர்வொன்றை எட்டுவதற்கு உடன்பட வாய்ப்பிருந்தது. ஆனால், பிரபாகரன் அதற்குச்சம்மதிக்கவில்லை".....**

இவ்வாறான அவரது பதிவு அவரது உள்மனக்கிடைக்கையைத் தெளிவாக எடுத்துக் கூறியதோடு மட்டுமன்றி, தமிழினத்தின் போராட்டப் பாதையில் பிளவுகளை ஏற்படுத்தும் விதமாக அமைந்திருந்தது.

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் இக்கூற்றை மெய்ப்பிக்க / பொய்ப்பிக்க உயிருடன் இல்லை என்பதற்கு மேலாக, இக்கருத்தானது எவ்வளவு தூரம் நேர்மையானது? என்பதற்கு ஒரு சில விடயங்களே போதுமானது.

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஓர் அங்கமான அரசியற் துறையின் அரசியல் ஆலோசகர் மட்டுமே!. தமிழீழ இறையாண்மைக்கு ஒவ்வாத அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டப் பாதைக்கு ஒவ்வாத தீர்வொன்றை அவர்கள் மீது திணிக்க முடியாதென்பது பாலசிங்கம் அவர்களுக்கு நன்கு தெரியும். போரியல் மற்றும் அரசியல் வழிகளில் விடுதலைப் புலிகள் இவ்வளவு காலமும் இயங்கிவந்த வரலாறே அதற்குச் சான்றாகும்.

இந்நிலையில்; எரிக் சொல்கைம் அவர்கள் சொல்வது போல, பாலசிங்கம் அவர்கள் விடுதலைப்பு லிகளுக்கு ஒவ்வாத சாமர்த்தியமான தீர்விற்குச் சம்மதம் தெரிவித்திருந்தால், அவர் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டிருப்பார். புலிப்பண்பாடு என்பது இம்மியளவும், எவ்விதத்திலும் தமிழீழத்தின் இறையாண்மையை விட்டுக்கொடாதது. அதன்பால் நோக்கினால், எரிக்சொல்கைமின் கூற்று எவ்வளது தூரம் உண்மை வாய்ந்தது? என்பதை அனைவரும் புரிந்து கொள்ள முடியும்.

"இலங்கையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், மனித உரிமை மீறல்களை இலங்கை அரசு மேற்கொண்ட தருணத்தில், எரிக் சொல்கெய்ம் அவற்றைக் கண்டிக்கத் தவறியதோடு மட்டுமன்றி, உடனடியாக கண்காணிப்புப் பணியிலிருந்து விலகாமல் அமைதி காத்ததானது மாபெரும் தவறாகும்"... அதே மேடையில் ***Gunnar*** அவர்களது கருத்திற்குப் பதிலளித்த எரிக் சொல்கைம்; ***Gunnar*** அவர்கள் பொறுப்பற்ற விதத்திலும், வெறுப்பை உமிழும் விதமாகவும் பேசுகிறார் எனப் பதிலளித்திருந்தார்.

எரிக் சொல்கைம் அவர்களது செயற்பாடு தற்போது எவ்வாறு அமைகிறது? என உற்றுநோக்கினால், இவரது நகர்வுகள் குறித்த தெளிவு நிலைக்கு நாம் இலகுவாக வந்தடைய முடியும். அண்மையில் *(2020)* ***Twitter*** தளத்தில் எரிக் சொல்கைம் அவர்களது பதிவு இவ்வாறு அமைந்திருந்தது.

இதே கருத்தியலோடு, தமிழகத்தில் உள்ள திராவிட / ஆரியச் சிந்தனைவாதிகளுக்கு நீரூற்றும் விதமாக, அண்மையில் இணையவழி ஒன்றுகூடல் திராவிட மேற்பார்வையாளர்களின் நெறிப்படுத்தலில் எரிக் சொல்கைம் அவர்கள் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு நிகழ்ந்தேறியது. அதிலும், பாலசிங்கம் அவர்கள் தெரிவித்ததாக இதே பொய்யை எரிக் கூறியிருந்தார். அவர் கூறியதன் அடி நுனி புரியாத திராவிடப் போர் 'வால்கள்' சரமாரியாக தமிழ்த் தேசிய நேசர்களையும், அதன்பால் இயங்கும் அமைப்புகள் மற்றும் கட்சிகளையும் தாக்கத் தொடங்கினார்கள்.

*2.0* - திராவிட வால்களின் தொல்லை தாங்கமுடியா அளவிற்கு எல்லை மீறிச் செல்வதை அவதானித்த வீரமணி மற்றும் கொளத்தூர் மணி ஆகியோர், திராவிட வயல்களுக்கு எதிராகக் கண்டனம் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது. ஆனால், திராவிடத்தின் நோக்கமே வேறு. கருணாநிதியைத் தாக்கினால், பிரபாகரனைத் தாக்குவோம் என்ற அரைவேக்காட்டுத் தனமான கூச்சல் இப்பொழுது தலைதூக்கி நிற்கிறது.

கருணாநிதி என்பவர் அரசியல்வாதி, பிரபாகரன் ஓர் போராளி. கருணாநிதி அரசியல் பாதையில் சேர்த்த சொத்தின் பெறுமதி என்ன? பிரபாகரன் வைத்திருந்த சொத்தின் பெறுமதி என்ன? கருணாநிதியின் பிள்ளைகளின் வாழ்க்கை எப்படி இருக்கிறது? பிரபாகரன் பிள்ளைகளின் வாழ்க்கை என்னவானது? என்பது போன்ற மிக இலகுவான கேள்விகளுக்கே இவர்களால் பதிலளிக்க இயலவில்லை.

இதற்கெல்லாம் மகுடம் சூட்டும் விதமாக, தமிழினப் படுகொலையைச் சிங்களம் நடாத்துவதற்கு ஏதுவாகவிருந்த எரிக் சொல்கைம் தமிழகத்தின் திராவிட வால்களோடு கைகோர்த்திருக்கிறார். இந்தத் திராவிட வால்கள் கூவுவதற்கான அரிசிப் பொரியைத்தான் சொல்கைமால் வீசமுடியுமே தவிர, தமிழினப் போராட்டத்தின் உண்மையையும், நேர்மையையும் இவர்களால் துளியும் அறிந்து கொள்ளவியலாது.




HANDY WELT
TRAVEL WITH OUR PHONE
Handy Reparatur
Handy Aufladen
Handyvertag
Günstige Sim Karten
Handy-Zubehör
Geld senden
Günstige gebrauchte & neue Handys
0231
961 26 555
SCAN MICH
1&1
ay yıldız
yourfone
FÜR DICH. FÜR SIE. FÜR ALLE.
O2
Blau
T
stromschalten.de
WESTERN UNION WU
Ria MONEY TRANSFER
Mallinckrodt Str. 70 • 44145 • Dortmund
01630 33 32 33
0231 981 89 888
handyweltdo20@gmail.com



# மீளும் என்பது கனவு

அன்புச் செல்வன்

அரசிற்குச் சொந்தமான ***China Merchants Port Holdings Company Limited (CMPort)*** நிறுவனத்துடன் அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பான சலுகை ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம், அம்பாந் தோட்டைத் துறைமுகத்தின் 70 சதவீத உரிமை சீன நிறுவனத்திற்கு வழங்கப்படுவதுடன், சிறிலங்கா துறைமுக அதிகார சபைக்கு மீதிப் பங்கு உரிமையாக வழங்கப்படுகிறது.

அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்படிக்கையானது, பல்வேறு சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது. சிறிலங்கா அரசாங்கம் தன் மீதான கடன்சுமையைக் குறைப்பதற்கு, அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் ஒரு பகுதியை குத்தகைக்கு வழங்குவது மட்டுமே சிறந்தத் தெரிவாகக் கொண்டுள்ளது.

தற்போது சிறிலங்கா மிகையான கடன் சுமைக்குள் சிக்கித் தவிக்கின்றது. சிறிலங்கா நடுத்தர வருமான நாடாகத் தன்னை உயர்த்திக் கொண்டுள்ள அதேவேளையில், சிறிலங்கா பெற்றுக் கொண்ட சலுகைக் கடனானது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் சிறிலங்கா அரசாங்கம் வர்த்தகக் கடனைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இதற்கும் அப்பால், சீனா எக்சிம் வங்கியால் சிறிலங்காவிற்கு உயர் வட்டி வீதத்தில் கடன் வழங்கப்பட்டது. இதற்கான நிதியானது வர்த்தக வட்டி விகிதத்தில் இறையாண்மைப் பத்திரத்தின் ஊடாகத் திரட்டப்பட்டது.



இதன் விளைவாக, கடந்த பத்தாண்டாக சிறிலங்காவின் வெளிக் கடனின் அளவானது, வியத்தகு அளவில் மாறியுள்ளது. 2006இல் சிறிலங்கா பெற்றுக் கொண்ட வெளியகக் கடனின் 6 சதவீதம் மட்டுமே வர்த்தகக் கடனாகக் காணப்பட்டது. ஆனால், 2012இல் இது 50 சதவீதமாக அதிகரித்தது. குறிப்பாக இதற்கான வட்டிவீதம் மிகவும் உயர்வாகக் காணப்படுகிறது. இக்கடன் சுமையானது, சிறிலங்காவைப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

2006இல் சிறிலங்காவின் வெளியகக் கடன் 10.6 பில்லியன் டொலராகும். கடந்த ஒரு பத்தாண்டிற்குள் வெளியகக் கடன் 140 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2016இன் இறுதியில், சிறிலங்காவின் வெளியகக் கடன் 25.3 பில்லியன் டொலராக அதிகரித்தது. இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 34 சதவீதமாகும்.

சிறிலங்காவால் பெற்றுக் கொள்ளப் பட்ட மொத்தக் கடன் தொகையில் 13 சதவீதம் அதாவது, 3.3பில்லியன் டொலர் சீனாவிற்குச் சொந்தமானதாகும். இதில் அதிகளவான கடன் கடந்த பத்தாண்டில் பெறப்பட்டதாகும்.

சிறிலங்காவானது சீனாவிடமிருந்து அதிகளவான கடனைப் பெற்றுக் கொண்டதற்கு முன்னைய ஆட்சியாளரான மகிந்த ராஜபக்சவின் அரசாங்கமும், தற்போதைய கோத்தபாய அரசும் பொறுப்பேற்க வேண்டும்.

## அம்பாந்தோட்டை உடன்படிக்கை

மேற்குலக நாடுகளில் ராஜபக்ச ஒரு பிரபலமான தலைவர் அல்ல!. ஆனால் ராஜபக்ச, சீனாவுடன் நெருக்கமான உறவைப் பேணியிருந்தார். அத்துடன் ராஜபக்ச தனது நாட்டில் கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்வதற்கான கடனை, சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்வதில் தயக்கம் காண்பிக்கவில்லை.

அம்பாந்தோட்டைத் துறைமுகமானது 99 ஆண்டு கால குத்தகைக்குச் சீனாவிற்கு வழங்கப் பட்டுள்ளது. இத்துறைமுகமானது சீனாவின் நிதியில் ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. சீனாவிடமிருந்து கடன் பெற்றே இத்துறைமுகம் கட்டப்பட்ட போதிலும், இது சீனாவிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது எனக் கருதமுடியாது.

ஆனால், சிறிலங்காவில் ஆட்சி மாறிய பின்னர், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைக் கட்டுவதற்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட கடனை அடைப்பதற்கு, சிறிலங்கா அரசாங்கத்திற்கு நெருக்கடியாக இருந்ததால் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை நீண்டகாலக் குத்தகைக்கு வழங்குவதென சிறிலங்கா தீர்மானித்தது. அத்துடன் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் மீதும், இதற்கு அருகிலுள்ள விமான நிலையத்தின் மீதும் இடப்பட்ட முதலீட்டிற்கு எதிர்பார்த்தளவு வருவாய் கிட்டவில்லை.

இதனால் சீனாவின் எக்சிம் வங்கிக்குக் கடனைத் திருப்பிச் செலுத்துவது சிறிலங்காவிற்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது. இதனால் அம்பாந் தோட்டைத் துறைமுகத்தை சீனாவிடம் பகிர்ந்து கொள்வதென சிறிலங்கா தீர்மானித்தது.

சீனாவிடமிருந்து பெறப்பட்ட கடனானது, சிறிலங்காவின் மூலோபாய அமைவிடங்களை அபிவிருத்தி செய்வதற்கு முதலீடு செய்யப்பட்டதுடன், தற்போது இவற்றில் சீனா தனது அதிகாரத்தைச் செலுத்துவதற்கும் அனுமதிக்கப் பட்டுள்ளது.

பொருளாதார இராச தந்திரத்தின் ஊடாக, தென்னாசியப் பிராந்தியத்தில் தனது அதிகாரத்தை நிலைநிறுத்தும்



சீனாவின் மூலோபாயத்தை, இந்தியா மிகவும் நெருக்கமாக அவதானித்துள்ளது. இது தொடர்பில் இந்தியா தனது அதிருப்தியை வெளிப்படுத்தியதுடன், இதன் விளைவாக சிறிலங்கா அரசாங்கமானது இருதலைக் கொள்ளி நிலைக்குத் தள்ளப்பட்டது.

சீனாவின் சிறிலங்கா மீதான பொருளாதார அதிகாரத்துவமானது கடன் என்பதுடன் மட்டுமல்லாது, முதலீடுகளையும் நோக்காகக் கொண்டிருந்தது. 2005இல், சீனாவிடமிருந்து பெறப்பட்ட வருடாந்த வெளிநாட்டு நேரடி முதலீடானது 1 மில்லியன் டொலருக்கும் குறைவாகவே காணப்பட்டது.

ஆனால், 2014இல் இது 400 மில்லியன் டொலர் வரை அதிகரித்தது. இக்கடன் மூலமே கொழும்புத் துறைமுக நகரத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டமானது பின்னர் கொழும்பு அனைத்துலக நிதி மையமாக பெயர் மாற்றப்பட்டது. இத்திட்டமானது சிறிலங்காவின் இறையாண்மை தொடர்பான கேள்வியை எழுப்பியது. அதாவது இத்திட்டத்தின் மூலம் கொழும்புத் துறைமுகத்திற்கு அருகிலுள்ள நிலம் 99 ஆண்டுகாலக் குத்தகைக்குச் சீனாவிற்கு வழங்கப்பட்டதால், இது சர்ச்சைக்குரியத் திட்டமாக அடையாளம் காணப்பட்டது.

கடந்த பத்தாண்டில், சீனாவிடமிருந்து 1.1 பில்லியன் டொலர் நிதி நேரடி வெளிநாட்டு முதலீடாகப் பெறப்பட்டது. இதே காலப்பகுதியில் சிறிலங்காவால் அமெரிக்காவிடமிருந்து 400 மில்லியன் டொலர் மட்டுமே நேரடி வெளிநாட்டு முதலீடாகப் பெறப்பட்டது.

சிறிலங்காவில் இடம்பெற்ற மீறல்கள் மேற்குலகின் அதிருப்தியைச் சம்பாதிக்கக் காரணமாகியது. இதனால் சிறிலங்கா வேறெந்தத் தெரிவும் இல்லாததால், சீனாவின் உதவியை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளியது. பணம் தேவைப்படும் இடத்தில் சீனா இருக்கும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

சீனா தனது பூகோள அரசியல் இருப்பிடத்தை உறுதிப்படுத்துவதற்காக, இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் ஒரு அணை, ஒரு பாதை என்கின்ற திட்டத்தை அமுல்படுத்தி வருகிறது. சீனா தனது திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்காக, இந்திய மாக்கடலில் உள்ள சில நாடுகளில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. இந்தவகையில் சிறிலங்காவும், சீனாவின் உதவியைப் பெறும் நாடுகளில் ஒன்றாக உள்ளதால் சிறிலங்கா தனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பைக் கைநழுவ விரும்பவில்லை.

சிறிலங்காவில் மட்டுமல்லாது பாகிஸ்தானின் குவடார் துறைமுகத்திலும், பங்களாதேசிலும் சீனா முதலீடு செய்துள்ளது. இந்தவகையில், சிறிலங்காவானது வீழ்ச்சியடைந்திருந்த தனது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான ஒரு வாய்ப்பாக சீனாவின் உதவியைப் பயன்படுத்தியது.

எனினும், கடன் போன்ற இராஜதந்திர நடவடிக்கைகளைச் சரியாகக் கையாலாகாமல் விட்டதால் சிறிலங்கா, சீனாவின் பொறிக்குள் வீழ்ந்துவிட்டது. இனி சிறிலங்கா மீளும் என்பது இப்போதைக்குக் கனவுதான்.

மூலம் : ***The diplomat***




# l·mobi mobile

top up | prices | My L-mobile | International

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 100MB (50MB + 50MB Gratis) €1 | 256MB (128MB + 128MB Gratis) €2 | 512MB (256MB + 256MB Gratis) €3 | 1GB (512MB + 512MB Gratis) €4 | 2GB (1GB + 1GB Gratis) €5 | 3GB (1.5GB + 1.5GB Gratis) €6 | 4GB (2GB + 2GB Gratis) €6,50 |
| 5GB (2.5GB + 2.5GB Gratis) €7 | 6GB (3GB + 3GB Gratis) €7,50 | 7GB (3.5GB + 3.5GB Gratis) €8 | 8GB (4GB + 4GB Gratis) €8,50 | 10GB (5GB + 5GB Gratis) €9 | 12GB (6GB + 6GB Gratis) €11 | 15GB (7.5GB + 7.5GB Gratis) €13 |

Maandelijks opzegbaar
Geen aansluitkosten
Geen BKR controle

l·mobi mobile SIM — gratis simkaart
l·mobi mobile SIM — maand bundel
l·mobi mobile SIM — jaar bundel

Action! get 2= pay 1
With an annual bundle
worth 24.95
Get the 2nd SIM card for
**FREE!**

# A whole year for a fixed price!

**Reliable, affordable, accessible. For everyone.**



+31 20 363 62 31
cs@l-mobi.nl

Website : www.l-mobimobile.nl

Amstel Business Park Entrada 204,
1114 AA Amsterdam

*Available at*

JUMBO · coop · AKO · recharge.com · SENIORSTORE.NL · bp · OPWAARDEREN.NL · BELTEGOED.NL · Phone House · Primera · telecombinatie · BCC · OPTIE 1 Smart Living · SPAR · MCD mijn supermarkt

ப்ரியமதா பயஸ், தமிழீழம்

**சமூக வலைத்தளங்களிலும், இணைய ஊடகங்களிலும் தம் பாட்டுக்கு செய்திகள் பகிரப்படுகின்றன. இவை மக்கள்முன் குழப்பமான அரசியல் சூழலை உண்டு பண்ணுகின்றதே தவிர, தெளிவான பார்வையை ஏற்படுத்தவில்லை.**



# இலங்கையின் வடக்கில் கட்சி சாராத ஓர் ஊடகத்தின் அவசியம்!

தமிழ் மக்களை பொறுத்தவரை இன்றைய அரசியல் நிலைமை, கண்ணிமைக்கும் நேரத்தில் மாறிப்போகும் ஒரு பனித்துகள் போல இருக்கின்றது.

காண்பவர், பார்ப்பவர் எல்லோருமே அரசியல் பேசும் நிபுணர்களாகவே தம்மை காட்டிக்கொள்கின்றனர். சமூக வலைத்தளங்களைத் தங்கள் அரசியல் பிரச்சார மேடையாகப் பயன்படுத்துபவர்கள் இப்போது அதிகம்.

ஆனால் - அரசியல், அரசியல் சார்ந்த நோக்கு என்பன சமூக வலைத் தளங்களில் பேசப்படுவது போல் சமூகத்துக்குள் பேசப்படவில்லை. காரணம், வளர்ச்சி அடைந்த நாடுகளைப் போல் எமது நாட்டு சமூக அமைப்பு, தொழிநுட்ப அறிவு சார் சமூக அமைப்பு இல்லை. ஒரு குறிப்பிட்ட வயதினரை மட்டுமே இந்தச் சமூக வலைத்தளங்கள் ஆக்கிரமித்திருக்கின்றன. அவர்கள் பெரும்பாலும் நன்கு உணர்ந்த தேசிய ரீதியான அரசியல் விடயங்களை நேரில் காணாதவர்களும், அதேவேளை சரியான அரசியல் பின்புலம் பற்றி அறியாதவர்களாகவுமே இருக்கின்றனர்.

சமூக வலைத்தளங்களில் தம்மை இணைத்துக் கொண்டுள்ள அரசியல் பெருந்தகைகளும், இந்த சின்னப் பிள்ளைத் தனமான அரசியல் விமர்சனங்களுக்குத் தலையாட்டிவிட்டு, வாய்மூடிப் போய் விடுகின்றனர். சில விமர்சகர்கள் உண்மை நிலைகளை எடுத்தியம்பும் போது அவர்களுக்குப் பலர் சேர்ந்து வீண் விமர்சனங்களை முன்வைக்கின்றனர். அதனால் அவர்களும் தமது கருத்து நிலையில் இருந்து பின் வாங்கிப் போகின்றனர்.

இதனால் சமூக வலைத் தளங்களிலும், அரசியல்சார் உண்மைகள் புறந்தள்ளப்பட்டு, ஓர் உணர்ச்சிசார் அரசியல் நிலைமை ஓடவிடப்பட்டுள்ளது.

தமிழனின் அரசியல் நோக்கம் என்ன? என்பது பற்றியும், அவன் அதனை அடைய எவ்வகை வழிகள் உண்டு? என்பது பற்றியும் கருத்து சொல்ல அங்கே யாரும் இல்லை.

இதனால் உணர்ச்சி ரீதியான அரசியல் நிலவரம் இளம் சமூகத்துக்குள் இளையோடப் படுகின்றதே அன்றி, உண்மை மற்றும் தேவையான அரசியல் நிகழ்வுகளும், விமர்சனங்களும் இடம்பெறாமல் போய் விடுகின்றன. இதே நிலைமைதான் வடக்கின் ஊடகங்களிலும் முன்னெடுக்கப் படுகின்றமை பெரும் வேதனைக்குரிய விடயமாக இருக்கின்றது.

வடக்கில் புதிது புதிதாய் முளைக்கும் எந்த அச்சு ஊடகமாக இருந்தாலும், பக்கச்சார்பான கட்சி அரசியலையே முன்னெடுக்கின்றது. இது மக்கள் மத்தியில் பெரும் குழப்பங்களை உண்டு பண்ணுமே அன்றி, நிலையான ஓர் முடிவுக்கு மக்களைக் கொண்டு வருவது மிகுந்த பிரயத்தனமான விடயமாகி விடுகின்றது. வடக்கில் இயங்கும் ஒவ்வொரு ஊடகமும், தாம் சார்ந்த அரசியல் நிலைமைகளை மட்டுமே முன்னிறுத்திச் செய்திகளை வெளியிடுகின்றனர்.

எந்தப் பத்திரிகையும் பொதுவான அரசியல் நோக்கத்தையோ, பொது அரசியல் விமர்சனத்தையோ முன் வைக்கத் தயாராக இல்லை. வெளிப்படையாகச் சொல்லப்போனால், சமூக ஊடகங்களில் பேசப்படும் அதே விடயங்களையே அவர்களும் அதே முறையில் கையாளுகின்றனர். இதனால் பாதிக்கப் பட போவது மக்களும், எதிர்காலமும் என்பதை எந்த அச்சு ஊடகமும் கணக்கில் எடுப்பதாக இல்லை. குறிப்பாக அரசியல் தலைவர்களுள் மூளும் பிரச்சனைகளை ஊடகங்கள் ஊதிப் பெருப்பித்து விடுகின்றனர்

அண்மைப் பிரச்சனைகள் கூட ஒவ்வொரு ஊடகத்திலும், ஒவ்வொரு விதமாக கையாளப்பட்டு பேசப்படுகின்றது. எந்த ஊடகமும் உரியவர்களை, உரியவர்கள் கருத்துகளை வெளிப்படையாக பெறவில்லை அல்லது






அது தொடர்பான நியாயமான கேள்விகளை எழுப்பவில்லை. அரசியல்வாதிகள் கூறும் கருத்துகளை அப்படியே கூறுவதும், அவர் இப்படி தெரிவித்தார் என அதை அப்படியே ஒப்புவிப்பதுமான தன்மையையே பேணி வருகின்றது. அதையும் மீறி பாசாங்குத் தனமாக அந்த விடயத்தை, நையாண்டித் தனமாக மக்கள்முன் கொண்டு செல்வதுமாகவே ஊடகங்கள் செயற்படுகின்றன.

அந்த விடயங்களை மக்கள் சார்ந்த விடயமாக எடுத்து, அவர்களை கேள்வி கேட்கவோ அல்லது அதுதொடர்பான உண்மைகளை அறியவோ எந்த ஊடகங்களும் தயாராக இல்லை. ஒப்புவித்து நிலைமைகளை மக்கள்முன் விதைக்க, ஊடகங்கள் தேவை இல்லை. மக்கள் சார்ந்த பிரச்சனைகளைத் தேர்வுக்குக் கொண்டுவர உழைக்கும் ஊடகங்களே இப்போது மக்களுக்கு வேண்டியவையாக இருக்கின்றன.

அரசியல் நிலைமைகளைத் தெளிவோடு, நடுநிலைமையோடு வெளிக்கொணரும் ஊடகங்கள் இப்போது மக்களுக்கு இன்றியமையாதவையாக உள்ளன. எல்லா பத்திரிகைகளையும் வாங்கி, செய்திகளை ஒப்பிட்டுப் பார்க்கும் நிலைமையில் மக்கள் இப்போது தள்ளப்பட்டுள்ளனர்.

பொதுவில் ஊடகங்களும், ஊடகவியலாளர்களுமே அரசியல் சமூக விடயங்களை மக்களுக்குத் தெரியப்படுத்தும் முக்கிய பணிகளைச் செய்கின்றனர் என்பதை மறந்த ஊடகங்களே இப்போது களத்தில் இருக்கின்றன. பொதுவாக அனைத்து ஊடகங்களும் இப்போது தாம் சார்ந்த தமது அரசியல் கட்சி விடயங்களைப் பெரிதுபடுத்தியும், அதனை நியாயப்படுத்தியும், அதன் அரசியல் நோக்கை உண்மைப் படுத்தியும் செய்திகளைப் வெளியிடுவதால் எது உண்மை? எது நியாயம்? என்கின்ற கேள்வி மக்கள்முன் எழுகின்றது.



இதனைப் போக்க சமூக வலைத்தளங்களிலும், இணைய ஊடகங்களிலும் தம் பாட்டுக்கு செய்திகள் பகிரப்படுகின்றன. இவை மக்கள்முன் குழப்பமான அரசியல் சூழலை உண்டு பண்ணுகின்றதே தவிர, தெளிவான பார்வையை ஏற்படுத்தவில்லை.

முடிந்த முடிவான அரசியல் நிலைமைகளைத் தெளிவுபடுத்த முடியா விட்டாலும், மக்கள் விரும்பும் அரசியல் விடயங்களைத் தெளிவுபடுத்த எந்த பத்திரிகையும் தயாராக இல்லை. தாம் சார்ந்த அரசியல் விடயங்களை மக்கள்முன் கொண்டு செல்லவும், தம் பத்திரிகை சார்ந்த அரசியலைத் தெளிவுபடுத்தவுமே ஊடகங்கள் முண்டியடிக்கின்றன. மக்கள் கருத்தையோ, மக்கள் கோரும் விடயங்களை அரசியல்வாதிகளுக்கோ, அரசுக்கோ தெரிவிக்க யாரும் தயாராக இல்லை.

அரசு சார்ந்தோ, அரசியல் சார்ந்தோ செயற்படாத ஊடகங்களால் மட்டுமே பொதுவான தீர்வுகளை, கருத்துகளை மக்கள்முன் கொண்டு செல்ல முடியும். அதேவேளை, மக்கள் நிலைப்பாட்டை அரசுமுன் கொண்டு செல்லவும் முடியும்.

அது தவிர்ந்த விடயங்கள் எல்லாம் குண்டு சட்டியில் குதிரை ஓட்டும் நிகழ்வுக்குச் சமனாகும். மக்கள் பத்திரிகைகளின் கருத்துகளை கருத்தில் எடுக்கின்றனர் என்பது, மிக முக்கிய சமூக பார்வையாக இருக்கின்றது. எந்த ஒரு விடயத்தையும் சமூகத்துக்குள் விதைக்க இந்த ஊடகங்களால் முடியும்.

உதாரணமாக 'நாளை பாடசாலை இல்லை' என சாதாரணமாக சிறுவர்களுக்குச் சொன்னால், யார் சொன்னார்கள்? என்று கேள்வி கேட்ப்பார்கள். 'பேப்பரில் இருக்கு!' என்று சொல்லிப் பாருங்கள். உண்மையில் அவர்கள் நம்பி விடுவார்கள். அதுபோலவே சமூக அரசியல் கருத்துகள் பத்திரிகை வாயிலாக வரும்போது மக்களும், சமூகமும் அதனை ஏற்கின்றது.

எனவே, உண்மைத் தன்மையை நடுநிலைமையான, அரசியல் கட்சிகளுக்குப் பக்கசார்பில்லாத, சாராத கருத்துகளை நடுநிலைமையான உண்மைத்தன்மையை, மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் ஒரு நடுநிலையான ஊடகமே தற்போது வடக்கு மக்களுக்குத் தேவையாக உள்ளது வெள்ளிடை மலையே!.




# தாட்சா'வின்
# இனப்படுகொலை
## ஆவணக்கையேடு
## (GENOCIDE CHRONICLE)

அகரம் குழுமம் மற்றும் ஐரோப்பியத் தமிழ் வானொலியால் உவந்து போற்றப்பட்ட தாட்சா'வின் இனப்படு கொலை ஆவணக்கையேடு ***(Genocide Chronicle)***

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் இரண்டாந்தலைமுறை இப்பொழுது தமிழீழத் தாயகம் தொடர்பான சிந்தனைக் கோட்பாடுகளிலிருந்து விலகி, மேற்குலகச் சரணாகதியை அடைந்துவிட்டது. 2009 இன் பின்னர் இந்நிகழ்வு எதிர்பார்க்கப் படாத அல்லது ஓர் சிலரால் எதிர்வு கூறப்பட்ட விடயமாயினும், தமிழினப் படுகொலை தொடர்பான ஆவணங்களில் உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழர்கள் பெரிதாக முனைப்புக் காட்டியிருக்க வில்லை.

2009இன் பின்னர் வெறும் வெற்று மேடைக் கூச்சல்களுக்கும், வீராவேசப் பேச்சுகளுக்கும் குறைவில்லாத புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அடிப்படைத் தோற்றத்திற்கான தேவை எங்கிருந்து தோன்றியது, தொடர்பான ஆவணப்படுத்தல் எங்கும் காணக் கிடைப்பதில்லை.

அதற்கான முடுக்கல்கள் ஊடாக இளையோரை இயங்கச் செய்யவேண்டிய தமிழர் அமைப்புகளோ, கொள்கைக்கு முரணாகவும், இருப்பைத் தக்க வைப்பதற்கான செயற்பாடுகளிலும் மட்டுமே இயங்கிக் கொண்டிருந்த சூழ்நிலையில், முற்று முழுதான தமிழினப் படுகொலை நிகழ்ந்து, பன்னிரு வருடங்களின் பின்பாவது இவ்வாறானதொரு ஆவணக் கையேட்டிற்கான தோற்றம் பற்றி இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்த 'தாட்சா' அவர்கள் சிந்தித்து, கடும் உழைப்பின் பிரதிபலனாக இதை வெளிக்கொணர்ந்திருப்பது மெச்சத்தக்கது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலப்பகுதிகளில் தமிழின் அழிப்பு நிகழ்ந்திருந்தாலும், அதற்குரிய ஆவணங்கள் அழிந்து போய்விட்டன. ஆனால், 1948 இற்குப் பின்னர், அந்த ஆவணங்களைத் தொகுத்து, எதிர்காலச் சந்ததியை அறிவூட்டுவதற்கான பரந்த தளம் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்தும், அதைச் செயற்படுத்தாது அமைதி காத்திருந்த முதலாம் மற்றும் இரண்டாம் தலைமுறை மீது, எதிர்காலச்



சந்ததி சுமத்தவிருந்த கொடும்பழியைத் தட்சாவின் செயற்பாடானது நீக்கியிருக்கிறது என நம்மவர்கள் ஆறுதற் பெருமூச்சு விட்டுக்கொள்ளலாம்.

ஈழத் தமிழர்கள் மீதான இனப்படு கொலைத் தகவல்கள் கொஞ்சம், கொஞ்சமாக சிறிலங்கா அரசால் அழிக்கப்பட்டு வருகின்ற வேளையில், “இன்று இல்லையேல் என்றும் இல்லை” என ஈழத் தமிழ்ப் பிள்ளையான தாட்சா சிந்தித்து ஆற்றிய பணி, வரலாற்றில் என்றும் இடம்பிடிக்கும்.

*1956 - 2010* வரையான இனப்படு கொலைத் தகவல்களை நான்கு மொழிகளில், நவீன முறையில், எளிதில் புரியக்கூடிய வகையிலும், படங்களோடும் பதிவு செய்திருப்பது மிகச்சிறந்த தூரநோக்குச் சிந்தனையின் வெளிப்பாடாகும்

வலிந்து காணாமலாக்கப் பட்ட தமிழர்கள், தமிழின அழிப்பை நடாத்த சிங்கள அரசு பயன்படுத்திய போராயுதங்கள், அதற்கு உதவி புரிந்த நாடுகள் போன்ற செய்திகளும், அதற்குரிய தரவுகள் மற்றும் ***QR Code*** ஊடாக தொடர்பு பட்ட செய்தித் தளங்களுக்குச் செல்லக்கூடிய வகையிலும் தமிழினப் படுகொலை ஆவணக்கையேடு உருவாக்கப்பட்டிருப்பது மிகச் சிறப்பானது.

கடந்த *23.10.2021* அன்று யேர்மனியில் ***Warendorf*** நகரில் இடம்பெற்ற இந்நூலின் வெளியிட்டு நிகழ்வில், அகரம் குழுமம் மற்றும் ஐரோப்பியத் தமிழ் வானொலி சார்பாக கலந்து கொண்டு உரையாற்றிய நிர்வாக இயக்குனர் திரு. இரவீந்திரன் அவர்கள், தட்சாவின் செயலைப் பாராட்டி, வாழ்த்துமடல் வழங்கிச் சிறப்பித்தார்.

அகரம் குழுமமும், ஐரோப்பியத் தமிழ் வானொலி நிர்வாகமும் ஈழத்தமிழர் விடுதலைக்கு என்றென்றும் துணை நிற்கும் என்பதோடு, இவ்வாறான முயற்சிகளைத் தொடரவேண்டுமெனவும் செல்வி தாட்சா அவர்களைக் கேட்டுக்கொள்கிறது.

**- அகரம் குழுமம்**








பூமிபுத்திரன்

# சூடேறும் சூடான்

ஆப்பிரிக்கக் கண்டத்தின் மூன்றாவது மிகப் பெரிய நாடான சூடானில் இராணுவம் ஆட்சியைப் பிடித்திருக்கின்றது. இதனைத் தொடர்ந்து மக்கள் ஆட்சியைக் கோரும் ஆர்ப்பாட்டங்கள் பரவலாக நடைபெற்று வரும் நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கிப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், பத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்தச் சம்பவங்களின் போது நூறுக்கும் அதிகமானோர் காயங்களுக்கு இலக்காகியுள்ளதாகவும், சுயாதீனமான தகவல்கள் தெரிவிக்கின்றன. தலைநகர் கார்ட்டூம் மற்றும் இரண்டாவது பெரிய நகரான ஒம்டுர்மான் ஆகிய இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள், நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவியுள்ளதாகத் தெரிகின்றது. மறுபுறம், ஆர்ப்பாட்டக்காரர்கள் விடயத்தில் நிதானத்தைக் கடைப்பிடிக்குமாறு ஐ.நா. பாதுகாப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

1956 யனவரி முதலாம் திகதி, சுதந்திரம் பெற்ற சூடான் தொடர்ச்சியாகப் பல இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புகளைக் கண்டு வந்துள்ளது. சுதந்திரத்தின் பின்னான காலப் பகுதியில் நீண்டகாலம் ஆட்சி புரிந்தவரான கேணல் ஒமர் அல்-பஷீர் இராணுவத்தின் துணையுடன் 1989ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். இரத்தக் களரிகள் எதுவுமின்றி இவர் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட போதிலும், இவரது ஆட்சிக் காலம் முழுவதும் இரத்தக் களரி மிக்கதாகவே கழிந்தது. ஹேக் நகரில் உள்ள பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றினால் இரண்டு தடவைகள் பிடியாணை வழங்கப்பட்ட ஓர் அரசுத் தலைவரான அல்-பஷீர் அவர்களின் ஆட்சிக் காலத்திலேயே 2011ஆம் ஆண்டில் தென் சூடான் தனிநாடாகப் பிரிந்து சென்றது.

தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்கியும், ஒரு கட்சி ஆட்சி முறையை அமுல் படுத்தியும், போட்டியாளர் இல்லாத



கேணல் ஒமர் அல்-பஷீர் அப்டல்லா ஹம்டொக் அல்-புர்ஹான்

**வெறுமனே 'சுதந்திரத்துக்கும், மாற்றத்துக்குமான சக்திகள்' என்ற கட்டமைமைப்பில் உருவாகியுள்ள விரிசல்களை மாத்திரம் காரணமாக வைத்து ஜெனரல் அல்-புர்ஹான், இந்த ஆட்சிக் கவிழ்ப்பை நிகழ்த்தவில்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.**

நிலையை உருவாக்கி, தேர்தல்களில் வெற்றி பெற்றும் வந்த அல்-பஷீரினால் 2019இல் ஏற்பட்ட மக்கள் எழுச்சியைச் சமாளிக்க முடியவில்லை. அவர் பதவி விலகச் சம்மதித்த நிலையில், இடைக்கால அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. 2023 யூலையில் பொதுத் தேர்தல் நடாத்தப்பட்டு, புதிய மக்கள் அரசாங்கம் ஏற்படும் வரை படைத்துறை அதிகாரிகளையும், அரசியல் கட்சிப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய இறையாண்மைச் சபை ஒன்றை ஏற்படுத்தவும் இணக்கம் காணப்பட்டது. அரசாங்கத்தின் தலைவராக தற்போது பதவி விலக்கப்பட்டுள்ள தலைமை அமைச்சர் அப்டல்லா ஹம்டொக்கும், இறையாண்மைச் சபையின் தலைவராக ஜெனரல் அப்டல் பற்றா அல்-புர்ஹானும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

2019இல் நடைபெற்ற மக்கள் புரட்சியின் விளைவாக உருவாக்கப்பட்ட 'சுதந்திரத்துக்கும் மாற்றத்துக்குமான சக்திகள்' என்ற கட்டமைமைப்பில் விரிசல்கள் தோன்றிய நிலையிலேயே ஜெனரல் அல்-புர்ஹான் ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொண்டார். இந்தக் கட்டமைப்பில் உள்ள சிறிய கட்சிகள், இராணுவப் பிடியிலுள்ள ஆட்சியைக் குடிமக்கள் கரங்களில் ஒப்படைக்கும் செயற்பாடுகளில் தாங்கள் ஓரங்கட்டப்படுவதாகவும், பெரிய அரசியல் கட்சிகளான சூடானிய காங்கிரஸ் கட்சி, உம்மா கட்சி, அரபு சோசலிச பாத் கட்சி மற்றும் சமஷ்டிக் கட்சி என்பவற்றுக்கு அதீத முக்கியத்துவம் தரப்படுவதாகவும் குற்றஞ்சாட்டியதுடன், தற்போதைய அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு, அதிகாரிகளால் நிர்வகிக்கப்படும் புதிய அரசாங்கம் ஒன்றைப் பதவியில் அமர்த்த வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டன.

அக்டோபர் 25ஆம் திகதி நடைபெற்ற ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து தற்காலிக அரசாங்கம் கலைக்கப்பட்டதுடன், தலைமை அமைச்சர் ஹம்டொக், அவரது இணையர் மற்றும் அரசாங்க முக்கியஸ்தர்கள் பலரும் கைது செய்யப்பட்டனர். 'ஆட்சியைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளேனே தவிர,




GGS
FOOD SERVICE
CONTACT
R.P. PARAMESH
02305 93 73 75
017 93 91 607

இதுவொரு இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு அல்ல" எனத் தெரிவித்த ஜெனரல் அல்-புர்ஹான், 'திட்டமிட்டபடி 2013 யூலையில் பொதுத் தேர்தல்கள் நடைபெறும்" எனவும் அறிவிப்புச் செய்தார்.

என்றாலும் இவரின் அறிவிப்பு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் கண்டனங்களையே சந்தித்தது. நாட்டின் தூதுவர்களாக அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், சுவிற்சர்லாந்து-ஜெனீவா, சீனா, பிரான்ஸ் மற்றும் கட்டார் ஆகிய இடங்களில் பணியாற்றியோர் ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிராகக் கண்டனங்களைத் தெரிவித்த நிலையில், அவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஜெனரல் அல்-புர்ஹான் தரப்பிலிருந்து தெரிவிக்கப் பட்டுள்ளது.

வெறுமனே 'சுதந்திரத்துக்கும், மாற்றத்துக்குமான சக்திகள்' என்ற கட்டமைமைப்பில் உருவாகியுள்ள விரிசல்களை மாத்திரம் காரணமாக வைத்து ஜெனரல் அல்-புர்ஹான், இந்த ஆட்சிக் கவிழ்ப்பை நிகழ்த்தவில்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

40 மில்லியன் மக்கட் தொகையைக் கொண்ட சூடானில் 80 சதவீதமான மக்கள் வறுமைக்கோட்டின் கீழே வாழ்வதாக 2018ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களின் நாளாந்த வருமானம் ஒரு அமெரிக்க டொலருக்கும் குறைவானதாகும். இதில் 5.8 மில்லியன் மக்கள் மனிதாபிமான உதவிகளை எதிர்பார்த்து உள்ளனர். 2.7 மில்லியனுக்கும் அதிகமான சிறார்கள் சத்துக் குறைபாடு உள்ளவர்களாக விளங்குகின்றனர்.

மோசமான ஆட்சி நிர்வாகம், ஊழல், தொடர்ச்சியான ஆயுத மோதல்கள், கனிமவளங்களை அதிகமாகக் கொண்ட தென் சூடான் தனியாகப் பிரிந்து சென்றமை ஆகிய காரணங்களால் மோசமான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ள நிலையில், தற்போது சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்தி நிற்கிறது சூடான். அமெரிக்காவின் நேரடிச் செல்வாக்கின் கீழ் உள்ள சர்வதேச நாணய நிதியம் தற்போது முன்வைத்துள்ள நிபந்தனைகள் சில ஜெனரல் அல்-புர்ஹானின் முடிவுக்குக் காரணமாக இருக்கக் கூடும் என்கின்றனர் சில நோக்கர்கள்.

போர்க் குற்றங்களுக்காக ஒமர் அல்-பஷீரை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்திடம் ஒப்படைத்தல், ஈரானுக்கு எதிரான ஒரு அணியைக் கட்டமைக்கும் நோக்குடன் இஸ்ரேலுடனான உறவுகளை ஆரம்பிக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் என பொருளாதார விடயங்களைக் கடந்து சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த 'நிபந்தனைகளை' அப்டல்லா ஹம்டொாக் ஏற்றுக் கொள்வார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையே ஜெனரல் அல்-புர்ஹானை இந்த முடிவுக்கு உந்தியிருக்கக் கூடும் என்கின்றனர் அவர்கள்.

ஒமர் அல்-பஷீர் பதவியில் இருந்து அகன்று இருந்தாலும் இராணுவத்தினரிடையே அவருக்கு இன்னமும் செல்வாக்கு உள்ளது என்பதை மறுத்துவிட முடியாது. இந்நிலையில், மேற்குலகின் காய் நகர்த்தல்களுக்கு எதிரான ஒரு மாற்றுத் திட்டமாகவே தற்போதைய ஆட்சிக் கவிழ்ப்பைப் பார்க்க முடியும்.

உலகமும், குறிப்பாக ஆப்பிரிக்கக் கண்டமும் கொரோனாப் பெருந் தொற்றினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் நலன் பற்றிச் சிந்திக்கத் தவறும் ஆட்சியாளர்களாயினும், உலக நாடுகளின் அரசாங்கங்களாயினும் பூகோள நலன் சார்ந்த கரிசனையில் இருந்து விடுபடாதவர்களாக உள்ளதையே சூடான் நிகழ்வுகளும் உணர்த்துகின்றன.

தற்போதைய நிலையில் ஐ.நா.வின் தலையீட்டுடன் ஆரம்பமாகியுள்ள சமரச முயற்சிகள் அடுத்துவரும் நாட்களில், சூடானில் அமைதியைக் கொண்டு வந்தாலும், அது நிரந்தரமானதல்ல என்பதையே உணர முடிகின்றது.

CENTURY
TRAVELS GMBH

Rheinische Strasse 29
44137 Dortmund

15 YEARS OF SERVICE

Qatar Airways



Hotel ( Level 1 Certified )
Corona schutz ( Insurance)
Transfer to Hotel
PCR -Test
ETA Visa

40kgs

# Frankfurt to Colombo ab669€

இலங்கையின்
எந்தப் பகுதிக்கும்
வாகன வசதி
செய்து தரப்படும்.





அனைத்து வசதிகளுடன்...

**Fon : 0231 5574 319**
**Fon : 0231 5896 557**
**Mob : 017621682149**

QATAR AIRWAYS القطرية · SriLankan Airlines · Emirates · الاتحاد ETIHAD AIRWAYS · AIRFRANCE · KLM Royal Dutch Airlines · Lufthansa · الطيران العماني OMAN AIR · AIR CANADA · एअर इंडिया AIR INDIA

தமிழ்நாட்டில் சில வாரங்களுக்கு முன்னர் ஒரு சம்பவம் நடந்தது. அஸ்வினி என்னும் பெயருடைய குறவர் சமூகத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு, கோயில் ஒன்றில் சாதியின் பெயரால் அன்னதானம் மறுக்கப்பட்டது. அஸ்வினி வெளியில் வந்து உரிமைக்குக் குரல் கொடுத்தார். அந்த வீடியோ வேகமாக பரவி, பல விவாதங்களைக் கிளப்பியது. அதன் பின்னர் அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு அந்த பெண்ணுடன் சமமாக உட்கார்ந்து சாப்பிட்டார். அஸ்வினி அகமகிழந்தார். உருக்கத்துடன் ஊடகங்களுக்குப் பேட்டி கொடுத்தார். அப்பொழுது அவர் ஒரு விடயத்தைத் தெளிவாக சொன்னார், “எங்களுக்கு உணவை விட, கல்வியே தேவை”. இது நடந்தது 2021இல்.

ஜெய்பீம் படத்தின் கதை 1995இல் நடப்பதாகக் காட்டப்படுகிறது. படத்தின் தலைப்பே பலரை நிமிர்ந்து பார்க்க வைத்தது. இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகப் போராடிய மாபெரும் தலைவர் அம்பேத்கர். அவருடைய முழுப்பெயர் பீம்ராவ் அம்பேத்கர். சாதிரீதியாக ஒடுக்கப்படுகின்ற மக்களுடைய உரிமை முழக்கமாக “ஜெய்பீம்” என்பது இருக்கிறது. பொதுவாக அம்பேத்கருடைய வசனங்களைத் திரைப்படத்தில் வைப்பது கூட ஒரு சவாலான விடயமாகத்தான் இன்று வரை இருக்கின்றது. சில திரைப்படங்களில் அம்பேத்கரின் வசனங்கள் வைக்கப்பட்டு, அவைகள் தணிக்கையின் போது நெருக்கடிகளைச் சந்தித்திருக்கின்றன. மம்முட்டி நடித்த “அம்பேத்கர்” திரைப்படத்தைத் திரையிடுவதிலும் நிறைய சிக்கல்கள் வந்தன.


இப்படியான ஒரு சூழ்நிலையில் ‘ஜெய்பீம்’ என்று தலைப்பை துணிந்து வைத்திருப்பதற்கு தயாரிப்பாளர்களான சூர்யா-ஜோதிகா தம்பதியினரைப் பாராட்ட வேண்டும். ஒடிடி தளங்களின் வருகையின் பின்னர் இது போன்ற விடயங்கள் சாத்தியமாக இருக்கின்றன. படத்தின் ஆரம்பக் காட்சியே அதிர வைக்கின்றது. சாதிப் பெயர்கள் வெளிப்படையாக சொல்லப்பட்டு, சாதிரீதியாக நிலவும் அடக்குமுறை அழுத்தமான முறையில் உணர்த்தப்

வி.சபேசன்

# திரைப்படங்கள் சமூகத்திற்கு உண்மையான பங்களிப்பை வழங்குகின்றன.

படுகிறது. பொதுவாக தமிழ் சினிமாவில் ஆதிக்க சாதிகளின் பெயர்கள்தான் உச்சரிக்கப் பட்டிருக்கின்றன. தேவர் மகன், சின்னக் கவுண்டர் என்று நாயகத் தன்மை அதன் ஊடாக காட்சிப்படுத்தப் பட்டிருக்கிறது. சாதிய ஒடுக்குமுறைய பேசுகின்ற படம் என்றால் சாதியின் பெயரை நேரடியாக சொல்லமாட்டார்கள். பார்வையாளர்களின் ஊகத்துக்கே விட்டு விடுவார்கள். ஜெய்பீம் படம் நேரடியாக சொல்கிறது.

குறவர்கள், இருளர்கள் போன்ற பழங்குடிச் சமூகங்கள் சந்திக்கின்ற அநீதிகளைப் படம் பேசுகிறது. அந்த மக்கள் மீது ஊரவர்கள் காட்டுகின்ற சாதியப் பாகுபாடுகள் வெளிப்படையாகக் காட்டப்படுகிறது. வீட்டுக்குள் பாம்பு வருகின்ற போது, அவர்களிடம் உதவிக்கு போகின்றவர்கள், பின்னர்





அதே மக்களைக் குற்றவாளிகளாக ஆக்குகின்றார்கள். வாக்குரிமை இல்லாத மக்கள் என்று அரசியல்வாதிகளும் அலட்சிப் படுத்துகிறார்கள். எழுதப் படிக்கத் தெரியாத மக்கள் யாரும் இன்றி அநாதையாக நிற்கின்றார்கள். இந்த மக்கள் மீது காவல்துறை மிகக் கொடுரமான சித்திரவதைகளைச் செய்கிறது. அந்தச் சித்திரவதைகளைப் பார்க்க முடியவில்லை. அவ்வளவு கொடுமையாக இருக்கின்றது.

காவல்துறையால் அடித்து இழுத்துச் செல்லப்பட்ட தன்னுடைய கணவனையும், மேலும் இரண்டு உறவினர்களையும் கண்டுபிடித்துத் தரச் சொல்லி பெண் ஒருவர் நடத்துகின்ற போராட்டம்தான் படத்தின் கதை. படம் உண்மையை உள்ளபடி பேசுகிறது. படத்தின் பலமும், பலவீனமும் சூர்யாதான். சூர்யா என்கின்ற ஜனரஞ்சகமான கதாநாயகன் நடித்திருப்பதால்தான் படம் இத்தனை கவனத்தை பெற்றிருக்கிறது. ஆனால், சூர்யாவின் உடல்மொழி வெளிப்படுத்துகின்ற கதாநாயகத் தன்மை படத்தின் இயல்பைச் சற்று குழப்புகிறது.

ராஜாக்கண்ணு, செங்காணி, குருமூர்த்தி போன்ற பாத்திரங்களில் நடித்தவர்கள் மிக அற்புதமாக நடித்திருக்கிறார்கள். எம்.எஸ். பாஸ்கர் ஒரு சிறந்த நடிகர். இந்த படத்தில் அவர் ஏன் இருக்கிறார்? என்பது தெரியவில்லை. காட்சிகள் பல்வேறு கதைகளைப் பேசுகின்றன. சூர்யாவிற்கு முன்னால் அந்தக் குழந்தை கால்மேல் கால் போட்டபடி பத்திரிகை வாசிக்கும் காட்சி மிக முக்கியமான ஒன்று. பாடல்கள் இந்தப் படத்தில் தேவைப்பட்டிருக்கவில்லை. பாடல்கள் இல்லாமலேயே படத்தை எடுத்திருக்கலாம்.

பொதுவாக கதாநாகன் அநீதிக்கு எதிராக போராடுவதற்கும் ஒரு காரணத்தைத் தமிழ் சினிமாவில் வைப்பார்கள். கதாநாயகனுக்கு ஒரு முன்கதை இருக்கும். அப்படி எதுவும் ஜெய்பீம் படத்தில் இருக்காது. கதாநாயகன் வீட்டில் கார்ல் மார்க்ஸ், தந்தை பெரியார், அம்பேத்கர் படங்கள் இருப்பதாகக் காட்டப்படுகின்றன. அடக்கப்படுகின்ற மக்களுக்காக பிரதிபலனை எதிர்பாராமல் கடைசி வரை போராடுகின்ற இயல்பை கதாநாயகன் எங்கே இருந்து பெற்றான்? என்பதை சொல்கின்ற காட்சிகள் அவைகள்.

உண்மைச் சம்பவம் ஒன்றைத் தழுவி படம் எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வழக்கை வக்கீலாக இருந்த சந்துரு என்பவர் நடத்தியிருந்தார். அவருடைய





வேடத்திலேயே சூர்யா நடித்திக்கிறார். வக்கீல் சந்துரு ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் பல்வேறு வழக்குகளை நடத்தியவர். இப்படியான வழக்குகளுக்கு அவர் பணம் எதுவும் பெற்றது இல்லை. பின்னர் அவர் நீதிபதியாக ஆவதற்கு முயற்சித்த பொழுது, அதற்கு பல்வேறு தடைகள் போடப்பட்டன. அவரைத் 'தீவிரவாதிகளின் வழக்கறிஞர்' என்று சொன்னார்கள். பின்னர் உச்சநீதிமன்றம் தலையிட்ட பின்னர்தான், சந்துருவால் நீதிபதி ஆக முடிந்தது. இப்படி பல்வேறு நெருக்கடிகளைச் சந்துரு சந்தித்திருந்தார்.

அதேவேளை இந்த வழக்கில் நீதி கேட்டு, கம்யூனிஸ்ட் கட்சி அப்பொழுது நிறையப் போராட்டங்களை நடத்தியது. இந்த வழக்கு மக்களின் கவனத்தைப் பெறுவதற்கும், நீதி கிடைப்பதற்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டம் மிக முக்கிய காரணமாகும். ஆனால், படத்தில் கட்யூனிஸ்ட் கட்சியின் பங்கு மேம்போக்காகவே காட்டப் பட்டிருப்பது ஒரு குறையாக இருக்கிறது.

'ஜெய்பீம்' படம் மிகவும் ஒடுக்கப்பட்ட பழங்குடி மக்களின் உரிமைகளுக்காக ஓங்கிக் குரல் கொடுக்கிறது. 1972இல் 'குறத்திமகன்' என்று ஒரு படம் வந்தது. குறவர் மக்களின் பிரச்சனைகளை அந்தப் படம் ஓரளவு பேசியது. தனது மகனுக்குக் கல்வி கிடைக்க வேண்டும் என்று குறவர் இனத்தைச் சேர்ந்த ஒரு தாய் விரும்புவார். அதற்காக பல்வேறு முயற்சிகளை அவர் செய்வார். அதனால் வருகின்ற சிக்கல்கள்தான் படத்தின் திருப்பமாகவே இருக்கும்.

1972இல் வந்த குறத்திமகனும் கல்வியின் தேவையைப் பேசியது. 1990களில் நடந்த இந்த கொடுமையின் போதும், பழங்குடி மக்களுக்கு கல்வியைப் புகட்டுவதன் முக்கியத்துவம் பற்றி பேசப்பட்டது. இன்றைக்கு 2021இல் அஸ்வினி கல்வியின் தேவையைப் பேசுகிறார்.

இந்தியாவில் தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் முன்னேறிய ஒரு மாநிலம். 69 விழுக்காடு இடஒதுக்கீட்டின் மூலம் பல்வேறு சமூகங்களுக்குக் கல்வி உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் பழங்குடி மக்கள் இன்னும் மோசமான நிலையில் இருப்பது ஏற்றுக் கொள்ளத் தக்கது இல்லை. அஸ்வினியும், ஜெய்பீம் படமும் இணைந்து எழுப்பியுள்ள உரிமைக்குரல் தமிழ்நாட்டு அரசின் காதுகளில் விழுந்திருக்கிறது.

முதலமைச்சர் ஸ்டாலின் பழங்குடி மக்களுக்கு வீட்டுமனை, அடையாள அட்டை போன்றவற்றை வழங்கி நலத்திட்டங்களை ஆரம்பித்து வைத்திருக்கிறார். இது போன்ற சம்பவங்களில்தான் திரைப்படங்கள் சமூகத்திற்கு உண்மையான பங்களிப்பை வழங்குகின்றன.



# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

ENESAR N.S.R. தயாரிப்புகளின் ஏக விநியோகஸ்தர்கள்

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்

25 ஆண்டுகளாக உங்களோடு நாங்கள்...

## மண்மணம் மாறாத சுவைதரும் தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்




ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

www.jaffnastores.com
info@jaffnastores.de

**Tel. - 0521 174794**
**Mobile - 01732807906**

**Feilenstraße 8**
**33602 Bielefeld**





V BOX
MEGA
Sale
€149
€109
செந்தூரன்
015146978484



ச.கஜாலினி

பகுதி-1

# மலையகத்திற்காக ஒருத்தி

“மாணவர்கள் நிரப்பப்பட வேண்டிய பாத்திரம் அல்ல. ஏற்றப்பட வேண்டிய தீபம். ஆசிரியர்களே அதனை ஏற்றக் கூடிய ஒளி விளக்குகள். உங்களையே நம்பி இருக்கும் மாணவர்களை உங்கள் முன்மாதிரியாக நடத்தை, வழிகாட்டல், அறிவூட்டல் என்பவற்றால் நாளைய ஆரோக்கியச் சமூகத்திற்கு அடித்தளமாக்குங்கள்...” என ஒரு விரிவுரையாளர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் வைபவத்தில் கம்பீரமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

அங்கே பின்வரிசையில் சாதாரண பெண்ணுக்குரிய உயரமும், பொதுவான நிறமும் கொண்டவளாக, இளம் நீல நிற புடவை அணிந்து, சாதாரண தோற்றத்துடன் இருந்தாலும், முகத்தில் ஒரு புதுவித தெளிவுடன் அமர்ந்திருந்தாள் ஷர்மிளா. வந்திருந்த அனைத்து ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்கப் பட்டது. அவ்விழாவில் விரிவுரையாளர் பேசியதை ஆழமாக மனதில் இருத்திக் கொண்டாள் ஷர்மிளா.

எந்தப் பாடசாலை என்றாலும், தன் கடமையைச் செய்ய தன்னை மனதளவில் பக்குவப்படுத்திக் கொண்டாள். ஆசிரியர் தொழிலைத் தொழிலாக எண்ணாது, அவளது முதல் காதலாகவும், சேவையாகவும் எண்ணி முதல் நாள் பள்ளியில் ‘ஷர்மிளா டீச்சர்’ ஆக காலடி எடுத்து வைத்தாள்.

நகர்ப்புறத்தில் பிறந்து, நகர்ப்புறப் பாடசாலையிலேயே கல்வி கற்ற சர்மிளாவிற்கு மலையகத்தில் ஒரு தோட்டப் பிரதேசப் பாடசாலை பெரும் சவாலாகவே இருந்தது. மகா வித்தியாலயமாக இருந்தும், அவள் நினைத்தது போல மாணவர்களின் தரம் இருக்கவில்லை.

மாணவர்களின் கற்றல் பின்னடைவை விட, அவர்களது நடத்தை சற்றும் எதிர்பாராததாக இருந்தது. அவர்களது நடை, உடை, பாவனை என அனைத்துமே வித்தியாசமானதாக இருந்ததன.

நாளடைவில் மாணவர்கள் பற்றிய போதிய விளக்கத்துடனேயே கற்பித்தலில் ஈடுபட வேண்டும் என எண்ணி, இது பற்றி சக ஆசிரியர்களிடம் விசாரிக்க தொடங்கினாள். “டீச்சர் இதுக இப்புடி தான். எவ்வளவு படிச்சி குடுத்தாலும், படிக்காதுக. வந்தமா, கடமைக்குப் படிச்சிக் கொடுத்தமா, சம்பளத்த வாங்கினமானு இருங்க. இதுகளையும் திருத்த ஏலாது. இதுக குடும்பத்தையும் திருத்த ஏலாது.” என அஃறினை பொருள்களைப் பேசுவது போல மாணவர்களைப் பற்றி சளிப்போடு பேசினார் ஒரு ஆசிரியர்.

ஏனையோரும் இது போன்ற எதிர்மறையான கருத்து மக்களையே

முன்வைத்தனர். சர்மிளாவிற்கு இது பெரும் அதிர்ச்சியாக இருந்தது. ஏதோ பெரிய சேவையில் ஈடுபட நியமனம் பெற்றவளாய், பல கனவுகளோடுப் பள்ளியில் காலடி எடுத்து வைத்தவளுக்கு அந்த ஆசிரியர்களின் கருத்து “இவர்கள் எல்லாம் ஆசிரியர்கள் தானா!” என எண்ண வைத்தது.

‘ஆசிரியன் ஒருவன் தன் கடமையைச் சரிவரச் செய்யவில்லை ஆயின், அவன் சமூகத்தை அழித்த கொலைகாரன் ஆவான்’ என அவள் தன் நாட்குறிப்பில் ஒருநாள் எழுதியது நினைவுக்கு, வர “நா கொலகாரி இல்ல, மாணவர்கள வளப்படுத்த வந்தவ” என தனக்குள்ளே எண்ணிக் கொண்டாள்.

இவ்வாறு நாட்கள் நகர தன் கடமையைச் சரிவர செய்யும் நோக்கில், மாணவர் தொடர்பாக ஆய்வு ஒன்றில் ஈடுபட தொடங்கினாள் ஷர்மிளா. மாணவர்களின் வீடு சென்று அவர்களது நிலை அறிய எண்ணினாள். இது தொடர்பாக மூத்த ஆசிரியர்களிடம் கலந்துரையாடிய போது, சரியான ஆதரவு எதுவும் கிடைக்கவில்லை.

மாறாக “புதுத்துடைப்பம்” என்றும் “இவ்வளவு நாள் நாங்க பாக்காதத தான் இன்னிக்கி வந்து, இவங்க பாக்க போறாங்களோ? ஏதோ சாதிக்க போறோன்ற நெனப்பு, எல்லாம் வெட்டிப்பேச்சு” என அவளுக்கு பின்னால் அவளைப் பற்றி கேலியாகப் பேசியதும் அவளுக்கு தெரியும். இருந்தும் அவள் சோர்வடையவில்லை.

‘காகம் திட்டியா மாடு சாகும்...?’ என்பதை உணர்ந்தவளாய் தன் ஆய்வைத் தொடர்ந்தாள். பாடசாலையில் இவளது முயற்சிகளைக் கண்டு, ஆதரவு வழங்க சில ஆசிரியர்கள் முன்வந்ததையும் மறுக்க இயலாது. அவர்களது உதவியுடன் மாணவர்களது குடியிருப்பை நோக்கிச் செல்லலானாள்.

நுவரெலியாப் பிரதேசத்தில் குளிரைத் தவிர்ப்பதற்கு ஏற்றார்போல் அடுத்தடுத்ததாக ஒரே மாதிரியாக அமைக்கப்பட்ட வீடுகளின் சேர்க்கை அந்த லயம். லயத்து வீடுகளில் வறுமைக்கு குறைவில்லை என்பது போல பிள்ளைச் செல்வங்களுக்கும் குறைவில்லை. ஷர்மிளா கல்லூரியில் படித்தது போல வயதுக்கு ஏற்ற உடல், உள நிலையில்லாத பிள்ளைகள். குழிவிழுந்த கண்கள், பனியில் கறுத்து வெடித்த உதடுகள், வயல், வரம்புகள் போல பனியால் கோலமிடப் பட்ட கை, கால்கள் என தோற்றத்திலேயே வறுமையின் வெளிப்பாடு.

திடீரென்று அங்கே

**அடுத்த இதழில் தொடரும்...**





17 YEARS
Radio - by - Phone
ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி
00 4934 5483411998
தொலைபேசி இலக்கத்தில்
ஐரோப்பியத் தமிழ் வானொலி
நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
00 49 231 700 977 60
அழையுங்கள்! வானொலியைக்
கேட்டு மகிழுங்கள்..!!
மேலதீக விபரங்களுக்கு... www.etr.fm






~~€149~~ **€109**

**40+ SPORTS CHANNELS AVAILABLE**

MANY MORE...

## WITH OVER 300 CHANNELS & 5000 MOVIES

**24X7 SALES & SUPPORT**

| Malayalam | Hindi | Telugu | Punjabi |
| --- | --- | --- | --- |
| 20+ CHANNELS | 20+ CHANNELS | 20+ CHANNELS | 20+ CHANNELS |

### REACH OUR DISTRIBUTORS

**OFFICE :**
0044 2037 690498

**UK :**
0044 7882274040
0044 7723229209

**SWISS :**
0041 4455 14321

**GERMANY :**
0049 15146978484
0049 17670334213
0049 62063052893

**FRANCE :**
0033 782775490
0033 977195911

**NETHERLANDS, BELGIUM, LUXEMBOURG :**
0031 621604168

**ITALY :**
0039 3510257812

**DENMARK :**
0045 20829548
0045 20718780